# சைவ நீதி

# Saiva Neethi

நற்றுணையாவது நமசிவாயமே



Price
£ 1
€ 1.25
$ 2


## கே பி வித்யாதரனின்

# குருபெயர்ச்சி பலன்கள்

## உள்ளே



Lycamobile
Call the world for less
THE SUNDAY TIMES
TECH TRACK
100
2012
HISCOX
Lycamobile
Call the world for less
GT MOBILE
LYCATEL
Call the world for less
THE SUNDAY TIMES
TOP TRACK
250
2011
HSBC
LYCAFLY.com
Lyca money
toggle
mobile




மேன்மைகொள்

# சைவ நீதி

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு - குறள்*

திருவள்ளுவர் ஆண்டு 2044
நந்தன : சித்திரை - வைகாசி
மலர் : 1 இதழ் : 3
மே 2013



பொறுப்பாசிரியர் :
பத்மினி சிவானந்தசோதி

பதிப்பாசிரியர் :
நா. சிவானந்தசோதி

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

| | |
|---|---|
| கணக்கு எண் | : 29513668 |
| வங்கி இலக்கம் | : 77 91 29 |
| வங்கி | : Lloyds TSB |

வடிவமைப்பு :
கமலா ஆர்ட்ஸ்

Layout :
Kamala Arts
Email : ambika.siva5@gmail.com


## முதலாம் திருமுறை

### சம்பந்தர் சுவாமிகள் அருளியது

திருவையாறு பண் - திருத்தாண்டகம்

**திருச்சிற்றம்பலம்**

எல்லா வுலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி. 6.38.7

சைவ சமயத்துக்கான செய்திகள், கட்டுரைகள், பாடல்கள் வாசகர்களாகிய உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.
மின்னஞ்சல் ( jothy5@yahoo.co.uk ) வழியாக அனுப்பிவைக்கப்பட்டாலும் பிரசுரிக்கப்படும்.

நன்றி






அன்பான வாசகர்களுக்கு

சைவநீதி என்பது ஒரு வாழ்க்கைக்குரிய வரைமுறை. கோயில் அமைத்து வணங்குவதற்கு அப்பாற்பட்ட விடயம். இந்த நாட்டில் உள்ள ஒரு கோயிலின் சிறப்பை பற்றி, எழுத விரும்பிய போது எந்த ஆலயமும் எனக்கு சரியாக தோன்றவில்லை. காரணம் எந்த கோயிலுக்கு சென்றாலும் இங்கு இது சைவசமயத்தவர்களின் ஆலயமா? அல்லது வைஷ்ணவர்களின் ஆலயமா? என சந்தேகமாக இருக்கும். குறிப்பாக முருகப்பெருமானின் ஆலயத்தை எடுத்துக்கொண்டால் அங்கு குருவாயூரப்பனை வைத்து வழிபடுகின்றார்கள். பிள்ளையார் கோயிலில் பெரிய அனுமாரை வைத்து வழிபடுகின்றார்கள். சைவ சமயத்தில் முதலில் சரியாக ஆலயம் அமைக்கப்படவேண்டும். அப்போது தான் இறைவனின் சக்தி எமக்கு பூரணமாக கிடைக்கும். நாம் எம்பெருமானாகிய சிவனை முழுமுதற்கடவுளாக வணங்குவதால் அவரை முதல் நிலைப்படுத்தி சரியான முறையில் ஆலயம் அமைத்து வழிபடவேண்டும் என்பது சைவ நீதியின் விருப்பமாகும். சைவத்தின் வளர்ச்சியில் ஆர்வம் உள்ள மக்கள் இதை செய்ய முன்வரலாம்.



# பிரதோஷ காலத்தின் சிறப்பு



வளர்பிறை மற்றும் தேய்பிறையில் வரும் த்ரயோதசி அன்று மாலை 4.30 மணி முதல் 6 மணி வரையுள்ள காலம் பிரதோஷ காலம் எனப்படும். தில்லை நடராஜப் பெருமான் நந்தியின் இரு கொம்புகளுக்கு இடையில் நடனம் செய்து தேவர்களுக்கு தரிசனம் தந்து அருளிய சிறப்புடைய காலம் இது. ஆதலின் பிரதோஷ புண்ணிய காலம் என்று மக்கள் வழக்கில் வழங்கப்படுகிறது. இக்காலத்தின் சிவபெருமானை வழிபடுவதும், தரிசிப்பதும் மிகப்பெரிய புண்ணியமாகும். சிவதரிசனத்திற்குரிய காலமும் இதுவே ஆகும். பின் வரும் பாடல் பிரதோஷ காலத்தில் பாடக் கூடியதாகும்.

## திருச்சிற்றம்பலம்

1. பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழி திருநாவலூர் வன் தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத ஊரர் திருத்தாள் போற்றி

[ நால்வர் துதி]

2. பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே

[விநாயகர் துதி]

3. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

[தொல்வினைகள் தொலைய]

4. மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே

[உடல் பிணி நீங்க]

5. பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குற நீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீ வினையே

[பிள்ளைப் பேறு பெற]

6. உன்னிஇருபோதும் அடியேனும் அடியார்தம் இடர்ஒல்க அருளித்
துன்னியொரு நால்வருடன் ஆல்நிழல் இருந்த துணைவன் தன் இடமாம்
கன்னியரொடு ஆடவர்கள் மாமணம் விரும்பியரு மங்கலம் மிக
மின்னியனும் துண்ணிடை நன் மங்கையர் இயற்றுபதி வேதிகுடியே

[திருமணம் கைகூட]

7. இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே
(செல்வம் பெருக)

8. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே
( நிலையான நல்துணை)

9. நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ்ஞான சம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எல்லாம்
பந்தபாசம் அறுக்க வல்லார்களே.
( நிலையான நல்துணை)

10. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச் சிவாயே.
( நிலையான நல்துணை)

11. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே
(திருக்குறுந்தொகை)

12. நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.
(திருக்குறுந்தொகை)

13. பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவு இலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீரா நோய் தீர்த்து அருளவல்லான்தன்னைத்
திரிபுரங்கள் தீ எழத் திண் சிலை கைக் கொண்ட
பேராணைப் புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.
(திருத்தாண்டகம்)

14. மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றாலும் பிறந்தேன் இனிப் பிற
வாத தன்மை வ ந்தெய்தினே
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க் கறை
யூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே.
(கல்வி பெற)

15. நானேயோர் தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கும் அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே
(திருவாசகம்)

16. பன்நெடுங்காலம் பணிசெய்து பழையோர் தாம்பலர்
ஏம்பலித் திருக்க
என்நெடுங் கோயில் நெஞ்சுவீற்றிருந்த எளிமையை
என்றும் நான் மறக்கேன்
மின்னெடும் புருவத்து இளமயில் அனையார்
விலங்கல்செய் நாடகசாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை இராச ராசேச்சரத்
திவர்க்கே
(திருவிசைப்பா)

17. பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று செய்தவன்
பண்ணிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே
(திருப்பல்லாண்டு)

18. சிவசிவ என்கிலர் தீ வினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிட தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே
(திருமந்திரம்)

19. கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவத்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி அலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங்காடே
(காரைக்கால் அம்மையார்)

20. உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்
(பெரியபுராணம்)

21. வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்
(உலக வாழ்த்து)

**சைவத்தை வளர்ப்போம் திருமுறை ஓதுவோம்**

மகனே! நீ எந்த இடையூறுமின்றி தவம் செய்வாயாக! என்று கூறிய, தன் தந்தை சிலாத முனிவரை வணங்கி வலம் வந்து அவரது கால்களைப் பற்றிக் கொண்டு, நீங்கள் தைரியமாக இருக்க வேண்டும்! என்று வேண்டி அவரிடம் விடைபெற்றுக் கொண்டார். பிறகு ஏழே வயதுடைய நந்திதேவர் சிவத்தியானத்துடன் மரணத்தை வென்று வரும்படித் திடங்கொண்டு கம்பீரமாக நடந்து தவம் செய்யும் விருப்பத்துடன் சென்றார்.

பிறகு நந்திதேவர் நதிகளில் சிறந்த புவனை நதியில் மூழ்கி நின்று சித்தத்தை சிவன்பால் வைத்து ருத்திர மந்திரம் ஜபித்து, மரணத்தை வெல்ல வேண்டும் என்ற கருத்தோடு வெட்ப தட்பங்களைக் கருதாமல் உலகத்தை மறந்து, பரசிவத்தில் ஐக்கியமானவரைப் போல விளங்கினார். உருத்திர மந்திர ஜபத்தை ஒரு கோடி முறை சொல்லி முடிக்கும்போது, பரமசிவன் அவருடைய தவத்திற்கு மகிழ்ந்து காட்சியளித்து, ''நந்தி கேள்'' என்றார். நந்திதேவர் தமது தியானத்தை நிறுத்திச் சிவபெருமானை வணங்கி, ''மிருத்யுஞ்சய மூர்த்தியே! நான் மீண்டும் ஒரு கோடி தரம் உருத்திர ஜெபம் செய்து முடிக்கும்படி அருள்பாலிக்க வேண்டும்.'' என்றார். ''அவ்வாறே ஆகுக'' என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். நந்திதேவர் மீண்டும் நீரிலிருந்து ஒரு கோடி ருத்திர ஜெபஞ் செய்து முடித்தார். அப்பொழுது சிவபெருமான் ரிஷப வாகனத்தில் காட்சி தந்து ''நந்தி! உனக்கு என்ன வரம் வேண்டும்!'' என்று கேட்க நந்திதேவர், ''இறைவா நான் மீண்டும் இன்னும் ஒரு கோடி முறை ஜெபம் ஜெபிக்கும்படி அருள் செய்ய வேண்டும்'' என்றார். ''அவ்வாறே ஆகுக!'' என்று வரமளித்து சிவபெருமான் மறைந்தார். இதுபோலவே ஆறுமுறைகள் சிவபெருமானிடம் வரம்பெற்று ஏழு கோடி தரம் ஜெபம் செய்து முடித்து பிரளய கால அக்கினியைப் போல பிரகாசமாக நந்திதேவர் ஜொலித்தார். அவரது பிரகாசத்தை காண முடியாத தேவர்களும், யமதர்மன் முதலிய அஷ்டதிக் பாலகர்களும் பயந்து நடுங்கினார்கள். சிவபெருமான் நந்தியின் திட சித்தத்தைக் கண்டு, திருவுளம் மகிழ்ந்திருக்கையிலேயே நந்திதேவர் எட்டாவது கோடியையும் முடிக்கக் கருதி உறுதியுடன் ஜெபித்துக் கொண்டிருந்தார்.

நந்தியின் ஜபம் முடியும் தருணத்தில் சிவபெருமான் வேதங்கள் நான்கும் புடை சூழ்ந்து முழக்கம் செய்யவும், பிரமனும், விஷ்ணுவும் இருபுறமும் நிற்கவும், கணபதி கந்தர்கள் தம்முடன் இருக்கவும், பார்வதி தேவியாருடன் நந்தி தேவரின் முன்பு காட்சி யளித்துத் தம் திருக்கரத்தால், அவரது கையைப் பற்றி புவனை நதிக்கரைக்குக் கொண்டு சென்று, அவர் உடலை ஆசையுடன் தடவிக் கொடுத்து, ''சிலாத புத்திரனே! உன் மனதில் யாதுள்ளதோ, அதைச் சொல், சிறிதும் அஞ்சற்க!'' என்றார். நந்திதேவர் சிவபெருமானைப் பணிந்து, ''மகாதேவரே, அடியேன் இனிமேலும் ஒரு கோடி ஜெபம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்'' என்றார். அதற்குச் சிவபெருமான், நந்தி! இது வரையில் நீ செய்த ஏழு கோடி ஜெபத்திற்கே உனக்கு எல்லாப் பதவிகளையும் கொடுத்திருக்க வேண்டும். இனி நீ ஜெபம் செய்ய வேண்டாம். மீண்டும் ஜெபம் செய்து யாது வரம் பெறுவாய்? பிரமத்வம், விஷ்ணுத்வம், இந்திரத்வம், சூரியத்வம், மோக்ஷம் அல்லது எனக்குச் சமானத்வம் இவற்றில் எதை விரும்பினாலும் கொடுப்பேன்'' என்றார்.

நந்திதேவர் ஜெபம் செய்வதை நிறுத்தி, சிவபெருமானின் திருவடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி அவர் எதிரே நின்று பலவாறும் துதித்து, சுவாமி! எனக்கு இந்திரத்வம், பிரமத்வம், லோக பாலகத்வம், சூரியத்வம் முதலிய எதுவும் வேண்டியதில்லை. அடிக்கடி பிறப்பதும், இறப்பதுவுமான ஜனன மரண துக்கங்களை அனுபவிக்காமல் இருக்க வேண்டும். மேலும் தங்களை தரிசித்துக் கொண்டே இருக்க வேண்டும். தாங்களே எனக்குக் கதி! எனக்கு குருநாதன் நீரே! தங்கள் திருவருளையடையாதவர்கள் அழிவார்கள். ஆகையால் மரணத்தை ஒழிக்கும் வல்லமை யில்லாத கடவுளை நான் விரும்ப மாட்டேன். அத்யந்தமான சுகத்தைத் தரவல்ல பரம் பொருளை நான் பார்த்து விட்டேன். அடியேன் உம்மிடம் நீங்காத அன்பும் பத்தியும் பெற்று தங்களையே விரும்புபவனாகி, ஜனன மரண துக்கங்களை ஒழிக்கும் ஆற்றலும், என்னால் நற்கதியை அடைய விரும்பி என்னைப் பெற்ற எனது தாய் தந்தையர்க்கு அழியாத சிவபதவியும், என்னால் எழுதப்பட்ட ஸ்தோத்திரத்தை வாசித்தவர்களுக்கு கைலாய வாசமும், சதுர்த்தி

திதியில் இந்த நாமங்களால் அர்ச்சித்து ஜெபித்தவர்களுக்கு முக்தியும் தந்தருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார்.

தன்னைப் பணிந்து நின்று, இத்தகைய வரங்களைக் கேட்டுக் கண்களில் பெருகிய ஆனந்தக் கண்ணீரால் தம் திருவடிகளை அபிசேகித்து இரு கரங்களாலும் பற்றி நின்ற நந்திதேவரை சிவபெருமான் தம் திருக்கரத்தால் எடுத்து விபூதியால் அலங்கரிக்கப்பட்ட தேகத்துடன் அணைத்து தழுவி தாமரை மலர் போன்ற தம் திருக்கரங்களால் அவர் உடலை ஸ்பரிசித்து, இவன் எம்மை ஆனந்த பாஷ்யத்தால் ஒரபிஷேகம் செய்தானாகையால், இவனுக்கு இரண்டு அபிஷேகங்களைச் செய்ய வேண்டும் என்று கடைக்கண் பார்வையாலும், வாக்காகிய அமுதத்தாலும் அபிஷேகம் செய்தார். பிறகு நந்தியை நோக்கி, மகனே! என்னைத் தரிசித்தவர் கள் ஒரு போதும் மரண பயம் அடைந்ததில்லை. என்னிடம் உனக்கு நிலையான பக்தி இருப்பதை நான் அறிவேன். நீ கேட்டவாறு மூப்பு, சாக்காடு இவற்றை ஒழித்து உன்னுடைய பெற்றோர்க ளுடன் என்னுடைய பாதாரவிந்தத்தில் வாழக் கடவாய். உன்னை தரிசித்தவர்களும், என்னைத் தியானித்தவர்களாய் என் சிவலோகத்தில் வாழ்வார்கள். நீ எனக்கு இஷ்டனாகவும், என் கணங்களுக்கு அதிபனாகவும், எனக்கு இணையான பராக்கிரமும், யோக வலிமையும் பெற்று என் அருகிலேயே வாழ்வாயாக. எப்பொழுதும் கிழியாமல் பரிமளத்துடன் விளங்கும் வெண் பட்டு ஆடையும், ஆயிரந் தாமரை மலர்களால் ஆன மாலையையும் உனக்குத் தருகிறேன் என்று அவ்வாடையை உடுத்தி, அந்த மாலையை கழுத்தில் அணிவித் தார். அதனால் நந்திதேவர் முக்கண்ணரைப் போல விளங்கினார்.

அப்போது சிவபெருமான் நந்தியைக் கையில் கொண்டு, நந்தி! உன்னால் பூஜிக்கப் பெற்ற இந்த இடம் ஜாப்யேஸ்வரம் என்ற பெயரால் வழங்கப்படும். இங்கு முழு மனதுடன் சொற்ப புண்ணியத்தையாவது செய்வார்களா னால், அவை ஆலமரத்து விதை பெரிய மரமாவதைப் போல, சிறப்பான பலனைக் கொடுக்கும் என்றும், இத்திருத்தலத்தில் தங்கள் உடலை நீப்பவர்கள் உனக்குக் கீழ்ப்பட்ட கணநாதர்களாகவும், உனக்கு இணையான தேகமும், உன்னோடு வாசமும் இடைவிடாமல் என்னைத் தரிசிக்கும் பாக்கியத்தையும் அடைவார்கள் என்றும் கூறியருளினார். ●

# பாவம் விலக தீபம் ஏற்றுங்கள்

நெய் விளக்கு ஏற்றிவிட்டீர்களா? லட்ச தீபத்தில் பங்கு கொண்டு விட்டீர்களா?

திருவண்ணாமலையில் மகாசிவராத்திரியன்று 1 லட்சம் தீபம் ஏற்றினார்கள். ஒரே நாளில் மாலை 6 மணியிலிருந்து 8 மணிக்குள் 1 லட்சம் தீபம் ஏற்றுகிறார்கள். இந்த கார்த்திகை தீபத்துக்கு நீங்கள் நெய் தீபம் ஏற்றுங்கள். கோவிலுக்கு போனால் அர்ச்சனை செய்வது நல்லதா? பூமாலை சாத்துவதா? அபிஷேகம் செய்வதா? பல பக்தர்கள் என்னிடம் கேட்கிறார்கள். அதற்கு நான் சொல்லும் பதில்... கோவிலுக்குப் போனால் நெய்த்தீபம் ஏற்றுங்கள். நீங்கள் தமிழ்நாட்டுக்குப் போனால் எல்லா கோவில்களிலும் இந்த வசதியை செய்து வைத்திருக்கிறார்கள். ஐரோப்பாவில் உள்ள எந்த கோவில்களிலும் இந்த வசதி இல்லை. வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் கோவிலில் இந்த வசதியை செய்து வைத்துள்ளார்கள். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள். இந்த சந்தர்பத்தை நழுவ விடாமல் லட்ச தீபத்தில் பங்கேற்றுக் கொள்ளுங்கள்.



# திருவாசகத்தேன்

திருமதி. பி. முரளிகரன்

தேன் எவ்வளவு சுவையானது என்று யாவருக்கும் தெரியும். உலகில் உள்ள பல உணவுப்பொருள்களில் குறிப்பிட்ட காலத்திற்குள் பாவிக்காவிட்டால் பழுதடைந்துவிடும். அதனால் தான் அந்த உணவுப்பொருளை அடைத்து வைக்கும் போத்தல் அல்லது பக்கற்றுக்களில் தேதியை குறித்து வைப்பது அவசியம். ஆனால் தன்னிலை கெடாமல் எத்தனை நாளானாலும் கெடாமல் அதே சுவையோடு இருப்பது அமிழ்தினும் இனிய தேனாகும். அதே போல் தான் திருவாசகமும், படிக்க படிக்க சுவை மாறாத, இன்பம் ஊட்டக்கூடியது. பரவசமாகி பரந்தாமனின் பாதக்கமலங்களை சென்றடைய வழிவகுக்கும். பக்தியோடு பாடும் போது அதன் சக்தி கூடி எம்மை சகல ஐஸ்வரியங்களோடும் நோயின்றி வாழவழி காட்டும் தன்மையுடையது.

*மறுவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்*
*திருவாசகம் என்னும் தேன்*

நோய்க்கு மருந்தாக பாவிக்கப்படும் தேனை அருந்த குணமாகும் வலியை போல, எந்த நோயுமே எமை அண்டாமல் இருக்க எம்பெருமானை உருகிப்பாடித்துதிக்க வாதவூரர் திருவாசகத்தை அருளியுள்ளார். எமது அறியாமையை நீக்கி, அதனால் வரும் தொல்லைகளை அகற்றி இடர்கள் வராமல் இருக்க திருவாசகம் என்னும் தேனைப் பருகுங்கள். குழவிகள் தங்களுக்கு மட்டுமே தேனை சேகரிக்கும் நுணுக்கம் தெரியும் என்றும், தங்கள் தொழில் இரகசியத்தை யாரும் அறிய முடியாதென்றும் இறுமாப்படைந்திருந்தது. ஆனால் அதனிலும் சுவையுடைய தேனை எமக்காக வாதவூரர் அருளியிருப்பதை அதனால் அறியமுடியவில்லை. பிறவி நோய் தீரவும், அல்லல்கள் அகலவும் திருவாசகத்தைப் படியுங்கள். ஆலயங்களிலே ஓதுவார் மூர்த்திகளோடு சேர்ந்து படிக்கும் போது எமது சிறார்களுக்கும் கேட்டுப்படிக்கும் ஆர்வம் உண்டாகும். பூசை ஆரம்பிக்கும் முன்பாக பஜனை பாடப்படும் நேரங்களில் மாணவக் குழந்தைகளை சேர்ந்து பாடவிடவேண்டும். அதனால் சிறுவயது முதலே அவர்களுக்கு இறைவன் அருளால் பலவிதமான அருள் கிடைக்க வழியுண்டாகும். புலம் பெயர்ந்த மண்ணிலே எத்தனை பெரிய செல்வம் இருந்தாலும் இறைவனின் கருணை இருந்தால் மட்டுமே சிறப்பாக மகிழ்ச்சியுடன் வாழலாம்.

சிறந்து அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் சிவனின் நாமத்தை என்றும் சிந்தையினுள் வைத்து மறவாதிருக்க வேண்டும். நாம் வாழ்ந்த காலத்திலே எத்தனை நல்லவர்களை பார்த்திருக்கின்றோம். அவர்கள் தங்கள் சமூக சேவைகளை மனம் நிறைவாக சரியாக செய்தார்கள். மகிழ்ச்சியோடு வாழ்ந்தது மட்டுமல்ல நோயின்றியும் இருந்து இறைவனடி சேர்ந்தார்கள். இறைவனின் திருவாசகத்தை தினமும் பாடிக்கொண்டிருக்கும் தாய் ஒருவர் ஒரு நாள் காலையில் இறைவனுக்கு முன் பாடிக்கொண்டு இருந்தபோதே இறைவனடி சேர்ந்துள்ளார். எமது செய்கைகளை இறைவன் கவனித்துக் கொண்டிருப்பதை நாம் மறந்து விடுகின்றோம்.

முக்குணங்களாகிய தமோகுணம், ராஜோ குணம், சத்வீககுணம் மக்களுக்கு உரியது. அதில் சோம்பல், கோபம், அமைதி காணப்படும். முதல் இரண்டாலும் எந்த பயனும் ஏற்படபோவதில்லை. அது யாவருக்கும் தெரிந்தது. ஆனால் அமைதியாக இருப்பதில் பல நன்மைகள் இருக்கின்றன. உதாரணமாக யோகிகள், ஆன்மீகவாதிகள் அதிகம் பேசமாட்டார்கள். அவர்கள் சிந்தனைகள் எப்போதும் இறைவனை நாடியே இருக்கும். அவர்கள் மன வேதனையுடன் வரும் மக்களுக்கு தங்களால் ஆன அறிவுரைகளை வழங்கி ஆசீர்வதிப்பார்கள். அவர்கள் வாய் எப்போதும் நமசிவாய, சிவாய நம என்று உச்சரித்தபடியே இருக்கும். நாயன்மார்களின் தேவாரங்களும் சரி, வாதவூரரின் திருவாசகமானாலும் சரி இறைவனை துதிக்கும் எந்த பாடலாக இருந்தாலும் மனமும் உடலும் லேசாகி இன்பம் அளிக்கும். ஆலயங்களிலே யாவரும் சேர்ந்து தம் குரலிசையால் பாடினால் அந்த இறைவனே தன்னை மறந்து கேட்போர்க்கு கேட்கும் வரங்களை அளிப்பான் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

*தேசனே தேனார் அமுதே சிவபெருமானே*

# குண்டோதரனுக்கு அன்னமிடல்

பாண்டியர் குலத் திருமகளாய் அவதரித்த தடாதகைப் பிராட்டியார் சுந்தரேஸ்வரருடன் நடந்த தம் திருமணத்திற்கு வருகை புரிந்த மாதவர், மறைவர், பன்னாட்டு வேந்தர் அனைவருக்கும் முறையே பொற்பாத்திரங்களில் அறுசுவை உணவை இட்டு உண்ணச் செய்து, சந்தனம், பட்டாடை, அணிகலன்கள், தாம்பூலம் மற்றும் ஏனைய பரிசுப் பொருள்களையும் அளித்து உபசாரம் செய்து ஐம்பத்தாறு நாட்டு மன்னவர்க்கும் விடை கொடுத்து அனுப்பி வைத்தார்.

அப்போது சமையல் தொழில் செய்வோர் அன்னையின் திருவடிகளில் விழுந்து வணங்கி, அன்னையே! அடியவர்களாகிய நாங்கள் சமைத்திட்ட அன்னத்தில் ஆயிரத்தில் ஓர் பங்கு கூட செலவாக வில்லை. நாங்கள் இனி செய்ய வேண்டியது யாது? அறிவுறுத்துவீர் என்று வேண்டினர்.

அதுகேட்ட தடாதகைப் பிராட்டியார் இறைவன் சுந்தேஸ்வரரின் முன்பாக வந்து நின்று அவரைப் பணிந்து வணங்கி, ஸ்வாமி! தங்களுடன் முப்பது முக்கோடி தேவர்களும் வருவர் என்று எண்ணி அறுசுவை உணவு வகைகளை அளவற்றதாகச் சமைத்திடச் செய்தோம். வந்திருந்தோர் அனைவருக்கும் படைத்தது போக எஞ்சியுள்ளது மலையளவு உள்ளது எனக் கூறினார்.

தன்னிடம் இவ்வாறு வினவிய தடாதகைப் பிராட்டியாரிடத்துத் தான் கொண்ட பேரன்பின் காரணமாக சுந்தர பாண்டியப் பெருமான் ஓர் திருவிளையாடல் புரிந்திடத் திருவுளம் கொண்டார்.

தனக்குத் திருக்குடை ஏந்துகின்ற பூதகணங்களின் தலைவனான குண்டோதரனின் பேராற்றலை இப் பூவுலகு அறிந்திடவும் இறைவன் விரும்பினார் போலும்! தம் பதிலை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தடாதகையின் திருமுகத்தை நோக்கி குறுநகை புரிந்த இறைவன், உனக்குப் பணிபுரிந்திடத் தேவலோகத்துப் பஞ்ச தருக்களும் உன்னிடத்தே உள்ளன. உன் அளவற்ற செல்வப் பெருக்கின் பெருமைகளை யாம் அறிந்திடு மாறு செய்தனை போலும். உனது பெரு விருந்தினை உண்டிட நம் கணத்துள்ளே பசியால் வருந்தும் எவரையும் காணோமே எனக் கூறியருளி விட்டுத் தன்னருகே நின்றிருந்த குண்டேதரனின் வயிற்றில் வடவாக்கினி புகுந்திடுமாறு திருவுளம் கொண்டார்.

வடவாக்கினி வயிற்றில் புகுந்து வருத்தியமையால் குண்டோதரன் பெரும்பசியால் தளர்ந்து உயிரொடுங்கிப் போனான். இறைவனைப் பணிந்த குண்டோதரன், ஐயனே! தாங்க முடியாப் பெரும்பசி என்னை வாட்டி வதைக்கின்றதே! என்று கூறி வருந்தினான். அதைக் கேட்ட இறைவன் சுந்தரேஸ்வரர் தன் தேவியை நோக்கி, தேவி! எமக்குக் குடை பிடித்திடும் குடைக்கால் பூதத்திற்குப் பிடி சோறினைக் கொடுத்தருள்வாய் என்று கூறியருளினார்.

இவ்வாறு கூறிய இறைவனை வணங்கிய தடாதகைப் பிராட்டியார் பெரும்பசியால் வாடி வருந்தும் குண்டோதரனை தன்னுடன் அழைத்துச் சென்றார். பேரரசியாரின் ஏவலுக்கு இணங்க சேவகர்கள் பசி என்னும் கொடும் பிணியால் வருந்தும் குண்டோதரனை அழைத்துச் சென்று பெரும் மலையெனக் குவிந்திருக்கும் அன்ன மலையின் முன்பாகக் கொண்டுவிட்டனர்.

அவ்வாறு தாங்கள் அழைத்து வந்த குண்டோதரன் அன்னக் குவியலின் முன்பாக அமர்ந்ததையோ, அன்னத்தை எடுத்ததையோ, உண்டதையோ சேவகர்கள் எவரும் காணவில்லை. குவிந்து கிடந்த அன்னக்குவியல் மறைந்தது. குண்டேதரன் உண்டதை நின்று பார்த்துக் கொண்டிருந்த ஏவற்பெண்டிர் தம் கைகளை நெறித்து வியப்புக் காட்டினர். சிலர் பயத்தால் வெருண்டு ஓடினர். சிலர் தம் கண்களை தம்மிரு கைகளால் பொத்திக் கொண்டனர்.


தனக்குப் படைக்கப்பட்ட காய்கறிகள், நெய், பால், தயிர், தேன் என அனைத்தையும் குண்டோதரன் தின்று தீர்த்தான். அப்போதும் தன் பெரும்பசி அடங்கப்பெறாத குண்டோதரன் அரிசி, நவதானியங்கள், வேகாத காய்கள், பலவகையான பழங்கள், பணியாரங்கள், கரும்புகள், தேங்காய்கள் போன்றவற்றையும் தன்னிரு கைகளால் வாரி வாரியெடுத்துத் தன் பெரு வயிற்றினுள் அடைத்துக் கொண்டேயிருந்தான். இந்நிகழ்வினைக் கேட்டும் கண்டும் அறிந்த தடாதகைப் பிராட்டியார் வியந்தார்.

தன் நாயகராகிய இறைவன் சோமசுந்தரரிடம் சென்று நாணம் மிகுந்து தலை கவிழ்ந்து தடாதகைப் பிராட்டியார் நின்றார். தடாதகைப் பிராட்டியாரின் நிலையை உணர்ந்து சோமசுந்தரேஸ்வரர், தேவி! நான் அனுப்பிய பூதம் மீந்திருந்த உணவு வகைகளை உண்டதா? இன்னும் மீதம் உணவு இருக்குமானால் மேலும் சில பூதங்களை அனுப்பி வைக்கட்டுமா? என்று வினவினார்.

இறைவன் நினைந்தருளியதுமே நான்கு திசைகளிலும் இருந்து தயிர்க்கடலானது பூமியைக் கிழித்துக் கொண்டு ஊற்றெடுத்துப் பெருகியதைப் போன்று நான்கு பெருங்குழிகள் தோன்றின. அவற்றில் இருந்து சுவை மிகுந்த தயிரன்னம் பொங்கியது.

அப்போது சோமசுந்தரப் பெருமான் குண்டோதரனைப் பார்த்து, குண்டோதரா ! உன் பெரும்பசி நீங்குமாறு இவ்வன்னத்தை உண்பாய் எனக் கூறியருளினார். உடனே நான்கு அன்னக் குழிகளிலிருந்தும் பொங்கி வழிந்த தயிரன்னத்தை வாரிவாரி உண்டான். இறைவனின் பெருங் கருணையால் தன்னை வருத்திய பெரும் பசி தீர்ந்த குண்டோதரன் உடம்பெல்லாம் வயிறாகப் பருத்துத் தரையிலே விழுந்து மூச்சு விட முடியாமல் புரண்டான். பசி தீர்ந்த குண்டோதரனுக்குத் தாகம் ஏற்பட்டது. தன் தாகத்தைத் தணித்திட வேண்டி நீர்நிலைகளைத் தேடி குண்டோதரன் சென்றான். எதிர்ப்பட்ட கிணறு, குட்டை,





அதற்குப் பிராட்டியார், ஸ்வாமி! தாங்கள் அனுப்பி வைத்த பூதம் வெந்தது, வேகாதது என அனைத்தையும் உண்டு தீர்த்து விட்டது. இந்நிலையில் தேவரீர் மேலும் பூதங்களை அனுப்பினால் இப்பூவுலகினையே அப் பூதங்கள் விழுங்கி விடுவார்கள். அதன் பின்னர் தங்களின் யுகாந்த கால உருத்திரர் என்னும் பெயர் உறுதி செய்யப்பட்டுவிடும் எனப் பணிவோடு கூறினார்.

அப்போது இறைவன் முன்பாக, தனக்குண்டான பெரும்பசித் தீ வருத்த குண்டோதரன் வந்து நின்றான். வெள்ளியம்பலத்திலே திருநடனம் புரிந்த இறைவா பெரும் மலையெனக் குவிந்திருந்த அன்னத்தினை உண்டும் என் பெரும்பசி தீர்ந்தபாடில்லையே! என்ன செய்வேன் ! என வருந்தி அழுது புலம்பி நின்றான்.

வேதப் பரம்பொருளான, சோமசுந்தரேஸ்வரர் தடாதகைப் பிராட்டியாரை நோக்கிப் புன்னகைத்தார். பின் பெரும் பசிப்பிணியால் அவதிப்படும் தன் பூதகணமான குண்டோதரன் பொருட்டுத் தன் சக்தியான அன்னபூரணியை நினைந்தருளினார். இவ்வாறு

ஓடை, குளம் அனைத்திலும் தன் வாயை வைத்து அவை வறண்டு போகுமாறு நீரினை உறிஞ்சிக் குடித்தும் குண்டோதரனின் தாகம் தீரவில்லை. இதனால் பெரும் துயருற்ற குண்டோதரன் சுந்தரேசப் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து தன் துயரைப் போக்கியருளுமாறு வேண்டினான். குண்டோதரனின் பெரும் துயரைக் கண்ட இறைவன் தன் திருமுடியில் துளங்கிடும் கங்கா தேவியை நோக்கி கங்கா ! இம்மதுரையம்பதியின் புறத்தே ஒரு நதியாக பெருக்கெடுத்து விரைந்து நீ வருவாயாக என ஆணையிட்டார்.

இறைவனின் திருவாணைப்படியே கங்கா தேவி அவரின் திருச்சடையை விட்டு நீங்கி அவரைப் பணிந்து இறைவா முன்னொரு சமயம் பகீரதனுக்காக தீர்த்தமாய் தேவரீர் என்னை விடுவித்ததுடன் என்னில் மூழ்கி நீராடுவோரின் பாவங்களையும் குற்றங்களையும் களைந்து செல்லுமாறு பணித்திட்டீர் ! இப்போது மேலும் ஓர் ஆறாகி நான் பாயப்போவதால் என்னைக் காண்போரும், தொட்டோரும், என்னுள் மூழ்கி

நீராடுவோரும் தங்களிடம் பக்தியும், கல்வியும், ஞானமும், வீடு பேறும் பெற்றருளிட கருணை கூர்ந்தருள வேண்டும்! என வேண்டினாள்.

பின் இறைவன் சுந்தரேசப் பெருமானிடம் விடைபெற்ற கங்கை மிகுந்த வேகத்துடன் எழுந்து புண்ணிய ஆறாக விண்ணிலிருந்து இறங்கினாள். புண்ணிய ஆறாக உருக்கொண்ட கங்கைக்கு அலைகள் கை வளையல்களாகவும், முத்துக்கள் அவளது வெண்ணிற பற்களாகவும், அலைகளால் உண்டான ஆற்றின் நுரையே ஆடையாகவும் பூங்கொடிகள் அவளின் இடையாகவும், கருமணல் நறுமணம் கமழும் கரிய கூந்தலாகவும் ஆயின.

இவ்வாறு பல்வகைப் பாங்குளைக் காட்டியவாறு பேரிரைச்சலுடன் பாய்ந்து வந்திடும் ஆறு கதியில் யானையைப் போன்று, கம்பீரத்துடனும், வளைந்தும், நெளிந்தும் வருவதில் நீண்டதொரு பாம்பினைப் போன்றும், நிலத்தைத் தோண்டி வருவதில் மகாவிஷ்ணுவின் அவதாரமான வராக மூர்த்தி போன்றும் தோன்றியது. பெருவெள்ளமென பெருக்கெடுத்து ஓடி வந்த புண்ணிய ஆற்றினைக் கண்ட சுந்தரேசப் பெருமான் தீராத் தாகத்தால் பெரும் அவதியுற்று ஐயகோ! எனது தீராத தாகம் தணிந்தபாடில்லையே! எனத் தவித்துக் கொண்டிருந்த குண்டோதரனை அவ்வாற்று நீரைப் பருகுமாறு விடுத்தார்.

பொங்கிப் பெருகி வந்த அப்புண்ணிய ஆற்றின் நடுவே சென்ற குண்டோதரன் தன்னிரு கைகளையும் ஆற்றின் கரைகளோடு சேர்த்து நீட்டினான். இதனால் தடைப்பெற்று நின்ற ஆறு பெரிய மடுவைப்போல் தேங்கியது. பெருகி நின்ற அப்புண்ணிய தீர்த்தத்தினை குண்டோதரன் தன் பெரும் வாயினைத் திறந்து பருகியதும், அது வரையிலும் தீராதிருந்த அவனின் தாகம் தணிந்தது.

இதனால் பேரானந்தம் அடைந்த குண்டோதரன் இறைவனின் திருவடிகளைப் பணிந்து அவரைப் போற்றி வணங்கினான். சொல்லின் பொருளாக விளங்கிடும் இறைவனும் தன் குடைபிடிக்கணமான குண்டோதரனின் போற்றுதல்களை செவிமடுத்து மகிழ்ந்தார். அத்துடன் தன் பூதகணங்களின் தலைமைப் பதவியையும் குண்டோதரனுக்கு அளித்து அருளினார்.

இவ்வாறு குண்டோதரனின் தீராத தாகத்தைத் தீர்த்திட வேண்டி பாய்ந்து வந்த புண்ணிய ஆறு வையை என்றும் பேரினைப் பெற்றது. இறைவனின் செஞ்சடையில் இருந்து பெருகி வந்தமையால் சிவகங்கை எனவும், சிவஞான தீர்த்தமென்றும், பெரும் வேகத்துடன் பாய்ந்து வந்தமையால் வேகவதி என்றும், மதுரையம்பதியை ஓர் மலையைப் போன்று சூழ்ந்து பாய்ந்தமையால் கிருதமாலை என்றும் போற்றப்பட்டது. ●

## சிவசொரூபம்



நாம் எப்படி வாழ வேண்டும் என்பதைக் காட்டுவதே, சிவசொரூபம்.

ஈசனின் ஜடாமுடியில் உள்ள சந்திரன் நம்முடைய இன்பமும், துன்பமும் மாறி மாறி வளர்பிறையாகவும், தேய்பிறையாகவும் வரும் என்பதைக் காட்டுகிறது. அங்கே இருக்கும் கங்கை, எப்போதும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஆசாபாசங்கள் நம்மை அலைக்கழித்தாலும் நம்முடைய மனம் அதனால் கெட்டுப் போய் விடக்கூடாது.

ஒவ்வொரு நிமிடமும் நம்மைப் பாவக் குழியில் தள்ள நச்சுப் பாம்பாக சூழ்நிலை சுற்றிக் கொண்டு காத்திருக்கிறது. ஆனால் அந்த விஷம் உள்ளே இறங்க நாம் விட்டு விடக் கூடாது. இதையே பரமனின் கழுத்தைச் சுற்றிய பாம்பும் அவர் விஷத்தைக் கண்டத்தில் தேக்கி வைத்திருப்பதும் உணர்த்துகிறது.

மிருக உணர்ச்சிகள் நம்மை பாதிக்கலாம். ஆனால் அவற்றிலிருந்து நீங்கிய, உயர்ந்த மனித உணர்வுடன் நாம் வாழ வேண்டும் என்பதை புலித்தோல் உடை அறிவுருத்துகிறது.

தேகத்தில் பாதியாக தேவியை வைத்துக் கொண்டிருந்தாலும் சிவபெருமான் காமத்தை வென்றவர். காமனையே எரித்தவர். அதைப் போல நாமும் உலகியலைப் பற்றி வாழ்ந்தாலும், காமத்துக்கு அடிமையாகாமல் அதைத் தூய்மைப்படுத்தி ஆன்மிகமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

# சைவ நீதி சால்புற மலரட்டும்

அண்மையில் இலண்டன் வந்த சமயம் "சைவநீதி" என்கின்ற சஞ்சிகை இரண்டு கையில் கிடைத்தது. "நற்றுணையாவது நமசிவாயமே" என்கின்ற அடைமொழியும் திருநந்தியப் பெருமானின் படம். சஞ்சிகையின் அச்சிலைப்படமாகவும் அமைய, அட்டைப்படம் நினைத்தாலே முக்திதரும். உண்ணாமுலை அம்பிகை உடனுறை அண்ணாமலையார் காட்சியோடு கனிவுறத் திகழ்ந்தது, "மாதம் ஒரு சைவ தரிசனம்" எனும் அடைமொழியோடு "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" தலைப்பில், பழனி ஆண்டவர் கோயில் பற்றிய தகவல்கள். பதிப்பாசிரியர், நா. சிவானந்த ஜோதி பகிர்ந்த விடயங்கள் அவரின் தல யாத்திரைகளின் அனுபவ பதிவுகள். சமயமும், சம்பவங்களும், எனும் தலைப்பில் மு. நற்குணதயாளனின் சிந்தனை. இது அவருடைய தனிப்பட்ட சிந்தனை. அதுமட்டுமின்றி கட்டுரை ஆரம்பிக்கும் போதே எனது சிந்தனைகள். சிந்திக்க வைத்தால் என்னை பாராட்டுங்கள் அல்லாமல் ரகசியமாக உங்களை ரணப்படுத்தினால் பகிரங்கமாக என்னை மன்னித்து விடுங்கள் என்று எழுத்தாளருக்கும் சிந்தனைவாதிக்கும் உரிய நேர்மையோடு அவர் கூறிய கருத்தை நாம் விமர்சிக்கக் கூடாது, அவர் நிலையில் அவர் சிந்தனைகள் தொடர வாழ்த்துவோம். மற்றும் பிரதோஷ விரதம் பற்றிய செய்திகள். சிறிய கட்டம் கட்டமாக சைவசமய கருத்துக்கள் என்பன அற்புதமான சிந்தனைகள், சைவநீதி இரண்டாவது சஞ்சிகையிலும், யோக நிலையில் "சிவபிரான்" அமர்ந்திருக்கும் அட்டைப் படத்தோடு அற்புதமாக காட்சி தந்தது, ஒரு மனிதனுக்கு அவன் சார்ந்த சமய அறிவு பூரணமாக இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த சமயத்தின் சமூகத்திலே அவன் மனித மேன்மையோடும், நெறியோடும் வாழ முடியும். அதற்கு இப்படியான சஞ்சிகைகளே. உசாத்துணை. சைவநீதியில் ஜோதிடம் பற்றிய ராசிபலன் அதிகமாகவே அமைகின்றது. இருபத்தி எட்டு ஆகமங்களில். உபாகமங்களின் ஓர் அங்கமாக ஜோதிடம் இருப்பதால், சைவத்தையும் ஜோதிடத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது. இரண்டாவது சஞ்சிகையில், விபூதி மகிமை, எண்திசைலிங்க தரிசனம், தமிழ் ஞான சம்பந்தர், போன்ற கட்டுரைகளும், பதிப்பாசிரியரின் திருவண்ணாமலை தரிசன அனுபவங்களும், சிறப்புற அமைந்திருந்தது. உண்மையிலேயே, "சைவம்" என்கின்ற சிவசமயச் சிறப்புகளின் பூரணமான நடைமுறைகளின் இருப்பிடம் "யாழ்ப்பாணம்" இதை யாரும் மறுக்க முடியாது. அந்த மண்ணில் பிறந்த சிறு பிள்ளைக்குகூட, சமயம், கோயில் பற்றிய புனிதம் தெரிந்திருக்கும், இந்திய திருத்தலங்கள், பாடல் பெற்ற தலமாகவும், பிரசித்தி பெற்ற சரித்திரத்தின் தொடர்புகள் பல கொண்டனவாக இருப்பினும், அங்குள்ள ஆலயச் சூழல் உண்மையான பக்தி நிலையை தருவதில்லை. இதில் ஒருசில ஆலயங்கள் தூய்மையானதாகவும் இருக்கின்றன. பெரும்பாலான ஆலயம் மேற்கூறிய ஆசாரமான தூய்மையான ஆலயச் சூழலை தருவதில்லை என்பது மனவருத்தத்திற்கு உரிய விடயம். எங்கள் ஊரில் வேப்பமர அடியில் ஒரு சூலம் இருந்தால்கூட அவ்விடம் ஆலய சூழல் என எம்மவர் புனிதப்படுத்துவர். எனவே எமது யாழ் மாவட்ட ஆலயத் தகவல்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அது சைவநீதிக்கு இன்றும் அழகு தரும் திரு. சிவானந்தஜோதி தனது வயது, அனுபவம், ஆற்றல், என்பனவற்றைக் கொண்டு சாதித்த "தமிழர் தகவல்" சஞ்சிகையின் வெற்றியில் இன்னுமொரு மலராக "சைவநீதி" களம் இறங்கியுள்ளது நல்ல பணி அதிலும் ஆன்மிகப்பணி, நிறைவோடும் பொழிவோடும் பூரணத்துவமாய் மலரட்டும். என்றும் என் வாழ்த்துக்கள்.

அன்புடன்: தின்னைபுரா.

கலாநிதி. ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்


## தமிழர்க்கு ஒரு புதிய தத்துவம்

# "நாமார்க்கும் குடியல்லோம்"

சூ. யோ. பற்றிமாகரன் BA Special Diploma (Oxford) BSc MA

அதிகாரம் 01

## தத்துவத்தின் வித்தினை விதைத்தவர்



அப்பரின் தத்துவத்திற்கு வித்திட்ட தாய் காரைக்காலம்மையார்

செந்தமிழ் இலக்கிய உலகின் முதல் எழுச்சி மொழி "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் அப்பரின் தத்துவமொழி. மரணபயம் நீக்கி மனிதசுதந்திரத்தினைப் பிரகடனப் படுத்திய இந்த வீரமொழிக்கு வித்திட்டவர் காரைக்காலம்மையார்.

இவர் வாழ்ந்த காலம் சுடுகாட்டைக் காட்டி வாழ்க்கை நிலையற்றது என நிலையாமை பேசி மரணபயம் ஏற்படுத்திச் சங்கத் தமிழர் காதலும் வீரமும் குலைத்த சமணமதம் தமிழகத்தில் கருத்தாட்சி செய்த காலம். அக்காலகட்டத்தில் சமணக்கருத்தியலால் பாதிப்புக்குள்ளான காரைக்காலம்மையார் கணவன் கைவிட்டுச் சென்றதன் பின் வீட்டுக்குள் முடங்கி மூலையில் வாழாது சாலையில் இறங்கி மரணபயம் நீக்கும் அறிவியல் பயணத்தைத் தொடக்கி சுடலையில் வாழ்ந்து ஈமப்புறங்காடு குறித்த மரணபயம் நீக்கு செந்தமிழ்ப் பாடல்களைப் பாடினார். இந்த சிந்தனைப் புரட்சியே சுதந்திரப் பிரகடனமாக "நாமார்க்கும் குடியல்லோம் – நமனை அஞ்சோம்" என அப்பர் பல்லவர் காலத்தில் பலமாக உரைப்பதற்கான வித்தினை இட்டது.

சமணமதம் வடக்கில் தோன்றி சந்திரகுப்தர் காலமாகிய கி மு 3ஆம் நூற்றாண்டளவில் பத்திரபாகு முனிவரின் சீடரான வைசாக முனிவர் மூலம் தமிழகத்தில் பரவத்தொடங்கியது என்பது வரலாறு. தமிழகத்தில் காணப்படும் மதங்கள் குறித்து ஆய்வுநூல்கள் எழுதிய மயிலை சீனிவேங்கடசாமி 'சமணமும் தமிழும்' என்ற நூலில் கி மு 3ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் சமணம் இருந்தது எனக் கூறினாலும் சங்க இலக்கியத்தில் சமணத்தின் தாக்கத்தை அதிகம் உணரமுடியவில்லை. நற்றிணையில் பாடலொன்றைப் பாடிய நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனாரை க. ப. அறவாணன் 'சைனரின் தமிழிலக்கண நன்கொடை' என்னும் நூலில் சமணர் என்கின்றார். டாக்டர் சொ. பரமசிவம் தனது நற்றமிழ் இலக்கணத்தில் உலோச்சனார் என்ற சங்கப் புலவரைச் சமணரென்கிறார்.


இவ்வாறாகச் சங்க இலக்கியத்தில் சமணப் புலவர் சிலர் காணப்பட்ட போதிலும் சங்கமருவிய காலத்திலேயே சமணம் 'சேக்கை' என்னும் சமணப்பள்ளிகள் வழி கல்வியை


வளர்த்ததின் மூலம் அறம்கூறு மதமாகத் தமிழகத்தில் வேகம் கொண்டெழுந்தது.

சமணர்கள் இன்று 24 தீர்த்தங்கரரை வணங்குகின்றனர். கடைசித் தீர்த்தங்கரராக மகாவீர வர்த்தமானர் திகழ்கிறார்.



முதல் தீர்த்தங்காரர் விருஷபநாதர். இவரை ஆதிபகவன், ரிஷபதேவர், ஆதிநாதர் என்று எல்லாம் சமணர் அழைத்தனர். 23வது தீர்த்தங்கரர் பார்சுவநாதர் நூறாண்டுகாலம் வாழ்ந்தவர் என்று கூறப்படுகிறது. தமிழகம் உட்பட இந்தியா எங்கும் சங்ககாலத்தின் பிற்பகுதியில் பரந்து காணப்பட்ட சமணர்களில் இருபிரிவினர் உளர். திக்கையே அதாவது திசையினையே ஆடையாக அணிந்துள்ளதாகக் கருதி நிர்வாண நிலையில் வாழ்ந்தவர்கள் திகம்பரர்.






பின்னர் தூய்மையை ஆடையாக அணிவதாகக் கூறி வெள்ளையுடை உடுத்தியவர்கள். ஸ்வேதாம்பரர். சிலப்பதிகாரக் குறிப்புகளின் படி திகம்பர சமணர்கள் சாவகர் – சாரணர் என்று இருபிரிவினைக் காலப் போக்கில் தமக்குள் கொண்டிருந்தமையை அறியலாம். சாவகர் – இல்லறத்தவர், சாரணர் – துறவறத்தவர். சாரணரின் முதன்மைக் கொள்கை கொல்லாமை. இதனால் புலால், தேன், கள் உண்ணாது உயிர்க்கொலை விலத்தி வாழ்ந்த சாரணர்கள் உயிர்க்கொலை என மீன்பிடித்தலையும் வேட்டையாடலையும் தாம் செய்யாது இரவில் உணவு உண்ணாது, பொய்பேசாது, பிறர்பொருளைக் கவராது, ஆசாரியர் வணக்கம் செய்து வாழ்ந்தனர். சாரணரின் முதன்மைக் கொள்கை அவா அறுத்தல். இன்னா செய்யாமை (அகிம்சை), வாய்மை, கள்ளாமை, பற்றின்மை (மிகுபொருள் விரும்பாமை இல்லறத்தில் உள்ளோர்க்கு), பிரம்மசாரியம் (பிறன்மனை நோக்காமை இல்லறத்தில் உள்ளோருக்கு) என்னும் ஐந்து உறுதிகள் சமணர்கள் அனைவராலும் கடைப்பிடிக்கப்பட்டன. பொறாமையுடமை, பணிவு, நேர்மை, தூய்மை, உண்மை, அடக்கம், தவம், பிறருக்குப் பயன்படக்கூடிய முறையில் கைம்மாறு கருதாமல் சமுதாயக்கடமைகளைச் செய்யும் ஒப்புரவு. நடுநிலைமை துறவறம் என்னும் பத்து அறங்கள் சமணத்தால் வலியுறுத்தப்பட்டன. அத்துடன் மக்களின் தொடர்புசாதனமாக இலங்குவது மொழி என்பதை உணர்ந்த சமணர்கள் மொழியின் வளர்ச்சிக்கு இலக்கண இலக்கியங்கள் கண்ட பெருமைக்குரியவர்களாகவும் திகழ்ந்தனர். ஆனால் காலகெதியில் சமணர்கள் பெண்களை காமத்தை இச்சையை ஆசையை தூண்டுகிற வர்களாகக் கருதத் தொடங்கினர். பெண்களி லிருந்து விலகி வாழ்தல் சிறந்தது என்ற கருத்து சமண மதத்தில் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. வணிகர்களின் சமயமாகச் சமணம் வளர்ச்சி கண்டதினால் வணிகர்கள் பெண்களைத் திருமணம் செய்த கைவிட்டு விட்டுச் சென்று தாங்கள் வணிகத்திற்காகச் செல்லும் இடங்களில் மீளவும் மணம்செய்து வாழும் வழமை பெருவழக்காகக் காணப்பட்டது. இந்தப் பின்னணியில் தேவதத்தன் காரைக்காலம்மையார் கதையினை எடுத்து நோக்கினால் பல உண்மைகளை உணரலாம்.



காரைக்காலம்மையார் சங்கம் மருவிய காலத்தில் கணவனால் கைவிடப்பட்ட போது

வீட்டுக்குள் இருந்து கைம்மை நோன்பு நோற்கவில்லை. நாட்டுக்குள் காலால் நடந்து தமிழ்ப் பாட்டால் மக்கள் விழிப்புணர்வு பெறச் செய்தார். இடுகாட்டினுள் முடியும் வாழ்க்கை என நிலையாமை பேசி தமிழர் இல்லற மாண்பினைக் குலைத்த சமணத்தை வேரறுக்கும் கவிதாச் சொல்லம்புகள் தொடுத்தார்.

இந்தத் தனிவழிப்போராட்டத்தின் தலைவனாக ஈசன் சிவனையே ஏற்றுப் போற்றிப்பாடினார். சுடுகாட்டில் தான் வாழ்ந்து ஈமப்புறங்காடே இறைவனுடன் ஆன்மா தாடலையாக இணையும் ஆனந்தபூமி என்று வாதிட்டார். இதன்வழி இடுகாட்டில் முடியும் வாழ்வு என்னும் மரணபயத்தை நீக்கினார். இடுகாட்டில் ஆனந்த நடனமிடும் ஆடல்வல்லா னாக இறைவனைக் காட்டிய அருளாளர் இந்த அம்மையார்.

தமிழர் வரலாற்றில் அற்புதத் திருவந்தாதி திருவிரட்டை மணிமாலை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்னும் மூன்றே மூன்று சிறுபிரபந்தங்களைப் பாடிச் சிந்தனைப் புரட்சியும் வரலாற்று மாற்றமும் தமிழர் கண்டிட வழிவகுத்தவர் இந்தப் புரட்சித்தாய் காரைக்காலம்மையார். வெண்பாவில் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் அகச்சான்றாக இத் தாய் தன் பெயரை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகப் பதிகங்களில் 11வது பாடலிலும் அந்தாதி 101வது பாடலிலும் காரைக்கால் பேயார் என்றே குறிப்பிட்டுள்ளமை முக்கியமாக அவதானிக்கப் பட வேண்டிய ஒன்றாக அமைகிறது. இந்தத் தாயாரைத் திருத்தொண்டர்த்தொகை தந்த நம்பியாரூர் என்னும் சுந்தரமூர்த்தி நாயனார் "பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்" என்று பேயார் என்றே குறிப்பிட்டுள்ளனர். திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பியும் நம்பியூரார் வழியில் பேயார் என்றே குறிப்பிட்டாலும் அம்மையார் தலையார் நடந்து கைலாயமலை மீது ஏறிய செய்தியை முதன்முதலில் கூறுகின்றார். திருக்கைலாய மண்ணைக் காலால் மிதிக்க அஞ்சி தலையால் நடக்கத் தொடங்கிய அம்மையின் கோலம் கண்டு உமையவள் சிரித்ததையும் சிவன் அம்மையே எனக் காலைக்காலம்மையாரை விளிக்க அன்னையும் பதிலுக்கு அப்பா என அழைக்க சிவனுக்கு அம்மையப்பன் என்று திருப்பெயர் வழக்கான வரலாறு திருத்தொண்டர் திருவந்தாதி வழியாகவே அறிமுகமாகிறது. காரைக்கால் தல புராணம் பூதவதி என்றே அம்மையாரை அழைக்கிறது. சேக்கிழார் பெருமானே அம்மையாருக்குப் புனிதவதி என்கிற பெயரைச் சூட்டி அவரின் பெருமையை உலகறியச் செய்தவராகிறார்.

பேய் பூதம் என்ற சொல்லாட்சிகள் சிவகணங்களைக் குறிப்பன என்பாரும் உள். இதனால் தான் சிவனின் அருகிருந்து மகிழும் உணர்விலேயே காரைக்கால் பேயார் என அம்மையார் தனக்குத் தானே பெயரிட்டார் என்பார். மேலும் அக்காலத்தில் மட்டுமல்ல இக்காலத்திலும் பொதுவான சமுதாய வழமைக்கு மாறாக வாழமுற்படும் பெண்களைப் பேய்கள் எனப் புறம் தள்ளும் வழமை உண்டு. காரைக்காலம்மையார் சமணமத வழக்கும் இறுக்கமான சைவசமயக் கட்டுப்பாடுகளும் பெருமளவில் இருந்த ஒரு காலகட்டத்தில்தான் புரட்சிப் பெண்ணாகத் தன்னை மாற்றினார். இதனால் அவரைப் பேய் என்று பெரும்பான்மையாகப் பழித்திருப்பர் என்பதும் ஏற்புடைய கருத்தாகவே உள்ளது. இந்நேரத்தில் காரைக்காலம்மையார் குறித்த சேக்கிழார் பெருமானின் பெரிய புராணக் கதையினைச் சுருக்கமாக எடுத்து நோக்குவது சிந்தனைத் தெளிவுக்கு ஏற்புடையதாக அமையும்.

தமிழகத்தில் காஞ்சியிலிருந்து பௌத்தம் உலகை நோக்கிப் பரவிய காலம் கி பி மூன்றாம் நூற்றாண்டு. கூடவே பாடலிபுரத்தில் இருந்து சமணம் வணிகர்களின் மதமாகப் பலம்பெற்று அவர்கள் செல்லும் இடமெல்லாம் நிதித்துணை கொண்டு வளர்ந்த காலம் அது. இரண்டு மதங்களுமே நிலையாமை பேசி இல்லற வாழ்வுக்குச் சவால் விடுத்தன. அதிலும் சமணம் பெண்களை மிக இழிவாக பேசியது மட்டு மல்லாமல் பெண்கள் மேலான பல அடக்கு முறைச் சமூகவழக்குகள் உருவாவதற்கும் தொடர்வதற்கும் காரணமாகியது.

சேக்கிழாரின் பெரியபுராணத்தின்படி சோழநாட்டின் கடற்கரைத் துறைமுக நகர்களில் ஒன்றான காரைக்காலில் பிறந்த பெண்ணுக்குத் தாய் தந்தையர் புனிதவதி எனப் பெயரிட்ட செய்தியை அறிகின்றோம். இவரே பின்னர் காரைக்காலம்மையார் எனச் சிறப்புற்றார். ஆனால் சேக்கிழாருக்குப் பெரியபுராணம் பாட வழிகாட்டிய சுந்தரமூர்த்தி நாயனாரின் 7ம் நூற்றாண்டுத் திருத்தொண்டத் தொகை காரைக்காலம்மையாருக்கு புனிதவதி எனப்

பெயர் கூறவில்லை. காலைக்காலம்மையார் தனக்குத் தானே இட்ட பெயராகிய பேய் என்னும் பெயர் விளங்கக்கூடிய முறையில் "பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்" என்றே பாடினார்.

சமூகத்தின் இறுக்கமான மட்டமான கட்டமைப்புக்கு எதிராகக் குரல் எழுப்பும் எப்பெண்ணையும் பேய்க் குணம் கொண்டவள் என் ஆணாதிக்கவாதிகள் குறிப்பது அன்றும் இன்றும் தொடரும் வழக்கம். காரைக்கால் தலப் புராணமும் இந்தப் பொதுமையை ஏற்று காரைக்கால் பூதம் என்றே குறிக்கிறது. இதன் வழி தங்களுக்காகப் போராடும் பெண்களைச் சாதாரண பெண்களிலிருந்து தனிமைப்படுத்தி சாதாரண பெண் தன்நிலைகுறித்துப் போராடாதபடி அச்சப்படுத்தப்படுகின்றாள் எனலாம்.

ஆயினும் 10ம் நூற்றாண்டில் திருத்தொண்டர் திருவந்தாதி பாடியவரும் திருமுறைகளைத் தொகுப்பித்தவரும் ஆகிய நம்பியாண்டார் நம்பி காரைக்காலில் பிறந்து வாழ்ந்த அருட்செல்விக்கு ஆண்டவன் அளித்த சிறப்பைப் பாடலாக்கிச் சென்றார்.

"நம்பன் திருமலை நான் மிதி
யேன்" என்று தாள் இரண்டும்
உம்பர் மிசைத்தலையால் நடந்
தேற உமை நகலும்
செம்பொன்உருவன் "என்
அம்மை எனப் பெற்றவள் செழுந்தேன்
கொம்பின் உகுகாரைக்காலினில்
மேய குலதனமே"

எனப்பாடி இறைவனாலேயே அம்மா என அழைக்கப் பெற்ற பெரும் பேறுக்குரியவர் காரைக்காலம்மையார் என்பதைச் சுட்டிச் சென்றார் தொடர்ந்து 12ம் நூற்றாண்டில் பெரிய புராணத்துச் சேக்கிழார் பெருமான் பன்னிரெண்டாம் நூற்றாண்டிலேயே புனிதவதி என மதிப்பளித்து மூன்று சிறு பிரபந்தங்கள் மூலம் தமிழர்களின் ஆன்மீக இலக்கிய செல் நெறிகளைத் தொடக்கி வைத்த ஆற்றலாளரான அன்னையே வணக்கத்துக்குரிய தாயாக வெளிப்படுத்துகிறார். சிவனடியார்கள் எனச் சேக்கிழார் பெருமான் அநாபயச் சோழனின் (2ம் குலோத்துங்கன்) காலமாகிய 12ம் நூற்றாண்டில் பாடிய திருத்தொண்டர் புராணத்தில் (பெரிய புராணம்) சிறப்பிக்கும் 63 நாயன்மாரில் மூவர் பெண்கள். புனிதவதியார் – திலகவதியார் – மங்கையர்க்கரசியார். இவர்களில் இலக்கியங் களை இயற்றியவராகவும் வழிபாட்டுக்குரிய வராகவும் விளங்குபவர் காரைக்காலம்மையார் ஒருவரே. இதிலும் ஏனைய 62 நாயன்மார் களின் திருவுருவங்களும் நின்ற கோலத்தில் திகழ இருந்த கோலத்தில் இலங்குவது காரைக்காலம்மையார் எனப்படும் புனிதவதி யாரின் திருவுருவம் ஒன்றே என்பது முக்கியமான ஒன்று. ஆன்மீகத்திற்கு அப்பால் தமிழிலக்கியத்தின் முதல் துறவியாகவும் முதன் முதலில் வீட்டை விட்டு சுடுகாட்டில் வாழ்ந்த வீரமகளாகவும் தமிழர்களையும் தமிழையும் சமணத்தின் பிடியிலிருந்து மீட்பதற்கான கருத்தியல் புரட்சியைத் தொடங்கி அப்பருக்கு வழிகாட்டியதால் தமிழர்களின் முதல் புரட்சியாளராகவும் காரைக்காலம்மையார் தமிழர் கலாச்சார வரலாற்றில் இடம்பெறுகின்றார்.

காரைக்காலின் வணிகர் குலத்தலைவர் தனதத்தனார் திருமகள் புனிதவதி. ஒரே மகள் என்பதினால் நாகபட்டினத்து நிதிபதி என்பரின் மகன் பரமதத்தனுக்குப் புனிதவதியை மணம்செய்து வைத்து வழக்கத்திற்கு மாறாக மாப்பிள்ளையின் ஊருக்கு அனுப்பாது தங்களது காரைக்காலிலேயே புனிதவதியைக் குடித்தனம் செய்யவும் வழிசெய்தோர் தந்தை தனதத்தன்.

புனிதவதி சிவப்பற்றுடன் இனிதாக இல்லறம் நடத்தி வரும் காலத்திலேயே வணிகத்திற்குச் சென்ற பரமதத்தனுக்குச் சிலர் மாங்கனி இரண்டைக் கொடுக்க அவன் அதனை அவர்கள் மூலமே வீட்டிற்கு அனுப்பி விட்டுத் தன் பணி தொடர்ந்தான்.

வழமைபோல் உலைமூட்டி அமுது சமைத்துக் கொண்டிருந்த புனிதவதியின் இல்முன்றலில் சிவனடியார் ஒருவர் பசியாற வந்தார். கறியமுது முடியாத நிலையில் மாங்கனி கொண்டு அன்னமிட்டாள் புனிதவதி. முதிய சிவனடியாரும் பசியாறிச் சென்றார்.

கணவன் பணி முடித்து வீடு வந்து உணவு உண்டதன் பின் மாங்கனி கேட்டான். புனிதவதி கொடுத்தார். ஆகா இனிமையாக உள்ளது. அடுத்த மாங்கனியையும் 'கொண்டு வா' என்றான் பரமதத்தன்.

புனிதவதி திகைத்தார். உள்ளே சென்று இறைவனை வேண்ட அவள் கையில் மாங்கனி ஒன்று தோன்றியது. அதனை எடுத்து வந்து கணவனுக்குக் கொடுக்க அதனை உண்டு சுவைத்த பரமதத்தன் "இது முன்னைய மாங்கனி வகைசார்ந்தது அல்ல. எங்கிருந்து பெற்றாய்" எனக் கேட்க புனிதவதி நடந்ததைச் சொன்னாள். நம்ப மறுத்த கணவன் "நீ சொல்வது

உண்மையானால் இறைவனிடம் வேண்டி மற்றொரு மாங்கனியும் கொண்டு வா" என்றான்.

புனிதவதி இறைவனை இறைஞ்ச அவள் கையில் மீண்டும் ஒரு மாங்கனி தோன்றியது. அதனைக் கணவனிடம் கொண்டு வந்த கொடுத்தாள். அவன் அதனைக் கையில் வாங்கியதும் அப்பழம் மறைந்தது. திகைத்தான் பரமதத்தன். தன் மனைவி பெண் அல்லத் தெய்வமென அச்சணமே புனிதவதியை விட்டு நீங்கி உறவினர் அளித்த மரக்கலத்தில் வணிகம் செய்யப் பிறதேசம் சென்றான். பெரும்பொருள் ஈட்டி மீண்ட பரமதத்தன் தன் ஊர் திரும்பாது வேறொரு ஊர்சென்று இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து அவளுக்குப் பிறந்த மகளுக்குத் தன் முதல் மனைவியைக் குலதெய்வமாகக் கருதி அவள் பெயரான புனிதவதி என்பதையே இட்டான். இவற்றைக் கேள்வியுற்ற ஊரவர் மூடு பல்லக்கில் புனிதவதியை அவள் கணவன் பரமதத்தன் இருக்கும் ஊருக்கு அனுப்பினர். புனிதவதியைக் கண்ட பரமதத்தன் அவளை வணங்கினான். ஊரவர்க்கு இவள் பெண் அல்ல தெய்வம் என்று உரைத்தான். அச்சணமே பல்லக்கின் திரை விலக்கி வெளிவந்த புனிதவதி இறைவனிடம் "இங்கு இவண் குறித்த கொள்கை இதுவெனில் இனி இவன் பொருட்டுத் தாங்கி நின்ற அழகை அழித்து உம்முடன் உள்ள பூதகணங்கள் போற்றும் பேய்வடிவம் அடியேனுக்கு வேண்டும்" என்று வேண்டினாள். அச்சணமே உடல் ஒட்டி ஊன் கழிந்த பேய் வடிவம் புனிதவதி பெற்றாள். திருவடி போற்றும் 'நாற்கணத்தினில் ஒன்றானேன்' என்ற உள்ளுணர்வு பெற்ற அம்மையார் அற்புதத் திருவந்தாதி பாடினார். தொடர்ந்து திருவிரட்டை மணிமாலையும் தொடுத்தார். கண்டவர் அஞ்சி ஓடும் பேய் உருக் கொண்ட அம்மையார் திருக்கயிலை நோக்கி நடக்கத் தொடங்கினர். திருக் கயிலையை அண்மித்த அம்மையார் காலால் நடப்பதை நிறுத்தித் தலையால் நடந்து சென்றார். உமையவள் இது கண்டு அதிசயித்து "தலையினால் நடந்து இங்கே ஏறிவருகின்ற எலும்பு உடம்பின் அன்பு என்னே? என்று கேட்க "வருகின்ற இவள் நம்மைப் பேணும் அம்மையே ஆவாள். இந்தப் பழமை சேர் வடிவத்தினையும் நம்மை வேண்டிப் பெற்றுக்கொண்டனள்" என்று அருளினார். அம்மையாரும் அருகே வர ஐயன் "அம்மையே" என்றழைத்தார். அதுகேட்ட அம்மையார் "அப்பா" என்று கூறி அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். இறைவன் அவளிடத்தில் "நம்மிடத்தில் இங்கு வேண்டுவது என்ன?" என்று கேட்க அம்மையார் கேட்டதைச் சேக்கிழார் தெய்வத்தமிழ் பின்வருமாறு எமக்குத் தருகிறது.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
யறவா நீயாடும் போதுன் னடியின்கீ
ழிருக்க" என்கிறார்."

இறைவனும் "தெற்குத் திசையில் உள்ள பழையனூர் என்னும் பழம்பதியாக நிலவிய திருவாலங்காட்டில் நாம் ஆடுகின்ற பெருநடனத்தைக் கண்டு, எப்போதும் ஆனந்தத்துடன் பாடிக்கொண்டிருப்பாயாக" என்று அருள்செய்தார். அம்மையாரும் இறைவனை வணங்கி தலையால் நடந்து திருவாலங்காட்டை அடைந்து அண்டமுற நிமிர்ந்தாடுகின்ற ஐயனது பெருங்கோலத்தைக் கண்டு "கொங்கை திரங்கி" என்று தொடங்கி மூத்த திருப்பதிகத்தினைப் பாடி அங்கேயே எழுந்தருளினார். குழகன் ஆடும் என்ற கருத்துடன் "எட்டி இலவம்" என்ற பதிகத்தினையும் பாடினார். இவ்வாறு ஐயனுடைய எடுத்த பாதநிழலிலேயே அம்மையார் என்றுமிருக்கும் பேறுபெற்றார். இதுதான் சேக்கிழார் பெருமான் தந்த காரைக்காலம்மையார் திருச்சரிதம். காரைக்காலம்மையாரே ஈமப்புறங்காட்டைக் காட்டி நிலையாமை பேசிய சமணத்தை இல்லாதொழிப்பதற்காகத் தானே கடலையில் வாழ்ந்து ஆன்மாவும் இறைவனும் கூடும் அவ்விடமே ஆனந்தத்தின் எல்லையில் இறைவனின் திருக்கூத்தைக் காணும் இடமென்றார். இதுவே மரணபயத்தை நீக்கும் தமிழர் ஆன்மீகச் சக்தியாகி அப்பரை "நாம் யார்க்கும் குடியல்லோம்" என இலக்கியப் பிரகடனம் செய்ய வைத்தது. பக்திப் பெரு இலக்கியத்திற்குப் பிள்ளையார் சுழியும் இட்டது. இறைவனுக்கு கூத்தன் என்ற திருப்பெயர் தமிழில் பெருவழக்காகவும் வழிசெய்தது.

******

சிவமயம்

# திருமுறை
# ஓர் அறிமுகம்

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகுஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம்வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

சைவத்தின் மேல் சமயம் வேறு இல்லை அதில்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த் திருத்தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த் துணையே

சிவத்திற்கு மேல் தெய்வம் இல்லை சித்திக்கு மேல் நூல் இல்லை என்பது பழமொழி. சைவம் என்பது பழமையும் பெருமையும் வாய்ந்த நெறி, இதைப் பெரிய புராணத்தில் சாக்கிய நாயனார் வரலாற்றில் காணலாம்.

செய்வினையும் செய்வானும் அதன் பயனும் நேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவ நெறி அல்லவற்றுக்கு இல்லை என
உய்வகையால் பொருள் சிவனென்று அருளாலே உணர்ந்து அறிந்தார்.

சிவப் பரம்பொருளது திருவருள் இன்பத்திலே திளைத்துத் தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறும்படி திருவாய் மலர்ந்தருளிய தெய்வத் தமிழ் பாடல்களே திருமுறை என வழங்கப் பெறுகின்றன. தமிழ் மக்களின் தவப் பயனாகத் தோன்றிய அருளாளர்களில் திருஞானசம்பந்தர் முதலாகச் சேக்கிழார் ஈறாக இருபத்தேழு ஆசிரியர்களால் அருளிச் செய்யப்பெற்றவை பன்னிரு திருமுறைகள். ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள திருமுறைகள் தோத்திரம், பத்தாவது சாத்திரம், பதினொன்றாவது பிரபந்தம், பன்னிரண்டாவது புராணம் எனப் பெயர்பெறும். முதல் ஏழு திருமுறைகள் சேர்ந்து தேவாரம் எனப் பெயர் பெற்றன, தே-தெய்வம், வாரம்-இசைப்பாடல்

இத்திருமுறைகள் தெய்வத்தைப் போற்றும் பாடல்களாய் இசையோடு ஓதற்கு உரியனவாய் இருத்தலின் அப்பெயர் பெற்றன. தேவாரம் பதிக அமைப்புடன் (பத்துப் பாடல்களைக் கொண்டதாய்) திகழ்வது. முதல் ஏழு திருமுறைகளோடு எட்டாம் திருமுறையாகிய திருவாசகமும் ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா. திருப்பல்லாண்டும் பதிக அமைப்பைப் பின்பற்றியுள்ளன. (தொடரும்)

# சமயமும் சம்பவங்களும்

மு. நற்குணதயாளன்

ஏராளமான சம்பவங்களின் தொகுப்புதான் சமயம். நாங்கள் இங்கே சமயத்தைப் பற்றித்தான் கதைக்கிறோமே ஒழிய ஆன்மீகத்தைப் பற்றியல்ல. சமயத்தில ஏராளமான கதைகள் இருக்கின்றன. சில நிகழ்வுகளும் இருக்கின்றன. இந்த நிகழ்வுகளையும் கதைகளையும் ஒன்று சேர்த்து சம்பவங்கள் என்று கூறியுள்ளேன். சில சம்பவங்களை நான் பார்க்கின்ற பார்வை உங்களைக் காயப்படுத்தலாம். ஆனால் நான் கூறுவதை நீங்கள் ஆறுதலாக வாசித்து சிந்திக்குமாறு வேண்டுகின்றேன். இந்தத் தடவை நந்தனாரின் வரலாறு பற்றிய ஒரு சிறு சிந்தனை.

நந்தனாரை சமயம் தெரிந்த எல்லோருக்கும் தெரியும். இவர் 63 நாயன்மாரில் ஒருவராகவும் உள்ளார். இவர் ஒரு சாதி குறைந்த மனிதர். இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் இவர் ஒரு தீண்டத் தகாதவர். இவர் ஆலயங்களுக்குள் செல்ல முடியாது. இவர் உயர்ந்த சாதி என் று சொல்லப்படுபவர்களோடு சரிசமனாக இருக்க முடியாது. ஆனால் உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்களின் 90 வீதமான வேலை களைச் செய்பவரும் இவர்தான். இந்தத் தீண்டத்தகாத வர்கள் தோளில் சால்வையும் போட முடியாது. எங்கு இவர்கள் சென்றாலும் இவர்களுக்கென்று பாத்திரங்கள் இருக்கும். இந்தப்பாத்திரங்கள் பல காலம் கழுவாமலே இருக்கும். அது எப்படி இருந்தாலும் அதில்தான் இவர்கள் சாப்பிடவேண்டும். இந்த உயர் சாதிக்காரர்கள் தாங்கள் சாப்பிட்டு தங்கள் செல்லப்பிராணிகளும் சாப்பிட்டு மீதமாக இருப்பதைத் தான் சாப்பாடாகக் கொடுப்பார்கள். இதிலே என்னவென்றால் இப்படி யெல்லாம் செய்கின்ற இவர்கள் முழுமுதற் கடவுளான சிவனின் பக்தர்கள். முருகனின் பக்தர்கள். அம்மாளின் பக்கதர்கள். இவர்களின் வாழ்க்கைத் தத்துவம் அன்பே சிவம் என்பது தான். இது பகிடியாக இல்லை. இந்த நந்தனார் ஒரு நிலச் சுவாந்தாரிடம் (ஆண்டகை) வேலைக் காரனாக இருந்து வந்தார். இவர் ஒரு சிவபக்கதர். இவருடைய போதாத காலம் இவருக்கு வரக் கூடாத ஆசை வந்து விட்டது. சிதம்பரம் போக வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. ஆண்டகை வெகுண்டெழுந்தார். எப்படி இது சாத்தியமாகும் என்று துள்ளிக் குதித்தார். ஆண்டகை ஊரிலுள்ள தன் எல்லா சாதிக்காரர்களுக் கும் இதனைத் தெரியப்படுத்தினார். எல்லோருமே கொதித்தெழுந்தனர். நந்தனாரோ தன் ஆசையை விடுவதாக இல்லை. ஆண்டகையின் கனவில் சிவபெருமான் வந்து நந்தனாரை சிதம்பரம் செல்ல அனுமதிக்குமாறும் கூறிச் செல்லுகிறார். அப்படி யிருந்தும் ஆண்டகை சம்மதிக்கத் தயாராகவில்லை. இறுதியாக ஆண்டகையும் அவர் கூட்டாளிகளும் ஒரு சதித்திட்டத்தை வகுக்கின்றனர். இது அந்த அப்பாவி நந்தனாருக்குத் தெரியவேயில்லை. நந்தனாருக்கு அனுமதி கொடுக்கப்படுகின்றது. நந்தனாரும் செல்கிறார். சிதம்பரம் சென்றதும் உள்ளேவிட பூசாரிமார் மறுக்கிறார்கள். பின்பு திடீரென்று நந்தனார் சோதியில் கலந்து மறைந்துவிட்டார் என்று வரலாறில் சொல்லி முடிக்கிறார்கள். ஆனால் உண்மையில் நடந்ததோ வேறு.



நந்தனார்

ஆண்டகையும் அவரது நண்பர்களும் கோயில் முன்றலில் வைத்துத் தீமூட்டி எரித்த சதிதான் நடந்தேறியது. இதனை மறைப்பதற்காக நந்தனார் சோதியில் கலந்ததாகவும் அவரின் உயர்வு கருதி அவரை 63 நாயன்மாரில் ஒருவராகவும் கொண்டு வந்து தப்பித்துக் கொண்டது அந்தச் சதிகாரக் கூட்டம். ●



# மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

மாதம் ஒருமுறை வெளியிடப்படும் சஞ்சிகையில் இடம்பெறும் ஆலயங்களில் இம்முறை திருச்செந்தூர் இடம்பெறுகின்றது. எம்பெருமானாகிய முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடு திருச்செந்தூர் ஆலயம் ஆகும். இவ்வாலயம் தூத்துக்குடியில் இருந்து 40வது கி.மீற்றர் தூரத்திலும், திருநெல்வேலியில் இருந்து 60 கி.மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது.

முருகப்பெருமான் தவம் செய்து சூரனை அழித்து சங்காரம் செய்த கோயில் இதுவாகும். இந்த கோயிலை 1963ம் ஆண்டு தரிசிக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அந்த நாட்களில் தங்கும் விடுதிகள் இல்லை. ஆதலால் தேவஸ்தான குடில்கள் தான் இருந்தன. அப்போது குறைந்த கட்டணம் 3 ரூபா மட்டுமே ஆகும். ஆனால் இன்றைய நிலை வேறு. திருச்செந்தூர் ஆலயத்தில் அதிக வேறுபாடு இல்லை. ஆனால் வெளியே உள்ள 5 நட்சத்திர விடுதிகள், உணவகங்கள் அழகாக அமைக்கப்பட்டு உல்லாசப்பயணிகள் தங்கி தரிசிக்க வழி அமைக்கப்பட்டுள்ளது.

எம்பெருமான் வருடம் 365 நாட்களும் தங்கரதத்தில் வீதி உலா வரும் காட்சி கண் கொள்ளாத காட்சியாக இருக்கும். முருகப்பெருமான் தங்கரதத்தில் அலங்காரம் செய்யப்பட்டு வீதியிலே வந்து மக்களுக்கு அருள்பாலிப்பது கிடைத்தற்கரிய பாக்கியமாகும்.

இங்கு கந்தசஷ்டி விரதம் மிக சிறப்பாக அநுஷ்டிக்கப்படுகின்றது. இவ்வாலயத்தில் இரண்டு கொடிமரங்கள் இருக்கின்றன. இரண்டிலும், கொடியேற்ற திருவிழா நடைபெறும். ஆவணி திருவிழாவிலும், மாசி திருவிழாவிலும் இரண்டு தேர் பவனிவரும். கந்தசஷ்டியும் 7 நாட்கள் நடைபெறும்.

கடலில் கூடிய கூட்டம் கடலா கடல் அலையா என்ற பாடலுக்கேற்ற கூட்டம் அன்று பார்த்தால் தான் தெரியும். பக்தர்கள் பரவசமாகி நின்று தங்கள் குறைகளை எல்லால் கூறி அவன் அருளைப் பெறுவார்கள். திருச்செந்தூர் பக்தர்களின் பரிகார கோயிலாக இருப்பது குறிப்படத்தக்கது. இங்கு முருகனுக்கு பாலாபஷேகமும், சண்முக அர்ச்சனையும் பிரபலமானது. சண்முக அர்ச்சனை கோயிலில் முறையாக வணங்குவதற்கேற்ப ஒரு முறையாகும். இதற்கு ரூபா 2000 மும் நன்கொடை வழங்கி ஏற்பாடு செய்தால் முன்னுரிமையோடு முருகன், வள்ளி தெய்வானை, தட்சணாமூர்த்தி, பைரவர் என சிறப்பு வழிபாடு செய்ய ஏற்பாடு



செய்யப்படும். நாம் கேட்ட வரத்தை வழங்கும் வழிபாடாக நிச்சயம் இருக்கும் என்பது மரபு. இக்கோயிலில் முக்கியமான விடயம் இது முருகனுக்குரிய கோயிலாக இருந்தாலும், சிவத்தலமாக கருதப்படுகின்றது. ஏனெனில் மூலஸ்தான அடியில் ஐந்து பஞ்சலிங்கங்கள் உள்ளன. அதை அங்கு செல்லும் பக்தர்கள் தரிசிக்கமுடியும்.

தட்சணாமூர்த்திக்கு வியாழக்கிழமை சிறப்பு வழிபாடு உண்டு. அன்று சென்று கொடிமரத்தை 3 முறை சுற்றி வணங்கி தெய்வத்திற்கு 4 தீப விளக்கு ஏற்றினால் நாம் நினைத்த வரத்தை வழங்குவார் என்பது ஐதீகம். அங்குள்ள கடலில் நீராடி பின் சூரனை வென்றபின்பு உருவாகிய நல்ல தண்ணீரில் குளித்து வழிபடுவது மேலும் சிறப்பு.

தற்போது சண்முக அர்ச்சனை ஞாயிறில் நடைபெறுவது இல்லை காரணம், கட்டுக்கடங்காத பக்தர் கூட்டமே ஆகும். சுனாமி நடைபெற்ற நேரம் கடல் கொந்தளிப்பு நடைபெற்றது யாவரும் அறிந்ததே. ஆனால் எம்பெருமானானின் அருளால் இவ்விடத்தில் உள்ள கடல் பின்வாங்கியது. இதை அறிந்த மக்கள் பெருவெள்ளமாக வந்து துதிக்கத் தொடங்கினர். இப்போது கட்டப்பொம்மனின் குலதெய்வமான முருகனுக்கு அவருடய பிறந்த நாளில் அவர் வழங்கிய பொன் ஆபரணங்களை சாத்திக் கொள்வது கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும். வசதி உள்ளவர்கள் அங்கு சென்று எல்லாம் வல்ல முருகனின் அருளைப்பெற சைவ நீதி வேண்டிக்கொள்கின்றது.

பதிப்பாசிரியர்

## சிவன் சொத்து குலநாசம்

ஒருமுறை எமன் தனது தூதர்களை அழைத்து அடேய்! இன்ன ஊரிலே இன்ன தெருவிலே சங்கரன் என்ற பெயரில் இருவர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் ரொம்பவும் நல்லவன். இன்னொருவன் தீய குணங்களை உடையவன். ஊரையே மிரட்டுபவன். அவனது ஆயுள் நாளையுடன் முடிந்துவிட்டது. அவன் உயிரை பறித்து வாருங்கள் என உத்தரவிட்டான். எமதூதர்களும் தங்கள் தலைவன் குறிப்பிட்ட ஊருக்குச் சென்று சங்கரனை ரகசியமாக கண்காணித்தார்கள். யார் நல்ல சங்கரன், யார் தீயவன் என்ற குழப்பம் ஏற்பட்டது. இதை எமலோகத்தில் போய் கேட்கப் போனால், தீயவனுக்கு குறிக்கப்பட்ட நேரம் கடந்து போய்விடும். எமன் தங்களை தொலைத்து விடுவான் என்று பயந்த தூதர்கள், அவசரத்தில் நல்ல சங்கரனின் உயிரை பறித்துக் கொண்டு சென்று விட்டனர். அங்கே போன பிறகுதான் தாங்கள் பறித்தது நல்லவனின் உயிரை என்று தெரிய வந்தது.

எமன் நல்ல சங்கரனிடம் மன்னிப்பு கேட்டு, சங்கரா! தவறு நடந்துவிட்டது. உன் உடலை எரிப்பதற்குள் பூலோகம் போய்விடு என்றான். அவன் திரும்பும் வழியில் எமலோக சேவகர்கள், நான்கைந்துப் பேரை மிகவும் கொடுமைப்படுத்துவதைக் கண்டான். அதுபற்றி எமனிடம் கேட்டான். சங்கரா! இவர்கள் சிவன் கோவிலில் திருடியவர்கள். சிவன் சொத்து குலநாசம் என்று தெரிந்தும் களவாடிய இவர்கள், இங்கே கடுமையாக தண்டிக்கப்படுகிறார்கள். பூலோகத்தில் இவர்கள் குடும்பத்தில் உள்ளவர்களும் பசி, பட்டினி, விபத்திச் சிக்கி அகால மரணமடைகிறார்கள் என்றான். சங்கரனும் ஒரு நல்ல தகவலைத் தெரிந்து கொண்ட மகிழ்ச்சியில் மீண்டும் பூலோகம் வந்து தன் உடலில் புகுந்து உயிர்பெற்றான். சிவாலயங்களுக்கு திருப்பணி செய்து பல்லாண்டு வாழ்ந்து மறைந்தான்.



# மேஷம்

## குருப்பெயர்ச்சி பலன்கள்

**( 28.05.2013 முதல் 12.06.2014 வரை )**



சொல்வன்மையும், செயல்திறனும் கொண்டவர்களே! இதுவரை உங்களின் தன வீடான 2ம் வீட்டில் அமர்ந்து உங்களுக்கு ஓரளவு சமூக அந்தஸ்தையும், வசதி, வாய்ப்புகளையும், குடும்பத்தில் மகிழ்ச்சியையும் தந்த குருபகவான் இப்போது 3ம் வீட்டிற்கு அடியெடுத்து வைக்கிறார். 28.05.2013 முதல் 12.06.2014 வரை உங்களின் விரைய பாக்ய ஸ்தானாதிபதியான குருபகவான் மூன்றாம் வீட்டில் மறைவதால் எதையும் உணர்ச்சிவசப்படாமல் அறிவுப்பூர்வமாக அணுகுவது நல்லது. எடுத்த வேலைகளை முதல் முயற்சியிலேயே முடிக்க முடியாமல் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது. குடும்பத்தினர் உங்களின் நிறை குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாமல் அமைதியாக ஏற்றுக் கொள்ளுங்கள். எவ்வளவு பணம் வந்தாலும் சேமிக்க முடியாதபடி செலவினங்களும் இருக்கும். இளைய சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். திடீரென்று புதிதாக அறிமுகமாகும் நண்பர்களை வீட்டிற்குள் அழைத்து வர வேண்டாம். நண்பர்கள், உறவினர்களில் யார் உண்மையானவர்கள், யார் போலியான வர்கள் என்பதை கண்டுபிடிப்பதில் ஒரு தடுமாற்றம் இருக்கும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம். தினமும் எளிய உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள். மூச்சு திணறல், வாயுத் தொந்தரவால் நெஞ்சு வலி வந்துப் போகும். மருத்துவரை ஆலோசித்து மருந்து உட்கொள்வது நல்லது. மனைவிவழி உறவினர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். கணவன் மனைவிக்குள் சச்சரவுகள் வரும். என்றாலும் அன்பும், அன்யோன்யமும் குறையாது. விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

குருபகவான் உங்களின் 9ம் வீட்டை பார்ப்பதால் பணவரவு உண்டு. பழைய கடன் பிரச்னைகள் கட்டுப்பாட்டிற்குள் வரும். தந்தையாருக்கு இருந்த நோய் குணமாகும். அவருடன் இருந்து வந்த மோதல்களும் விலகும். வழக்கால் இருந்த நெருக்கடிகள் நீங்கும். திருமணம், சீமந்தம், கிரகப்பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். உறவினர், நண்பர்களுடன் இருந்த மோதல்கள் விலகும். குருபகவான் 11ம் வீட்டைப் பார்ப்பதால் கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பால் தெளிவடைவீர்கள். மூத்த சகோதரங்கள் ஆதரவாக இருப்பார்கள். பதவிகள் தேடி வரும். ஷேர் மூலம் பணம் வரும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். இழுபறியாக இருந்த அரசாங்க விஷயம் சாதகமாக முடியும்.

**குருபகவானின் சஞ்சாரம் :**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் ராசிநாதன் செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் செல்வதால் சவால்களில் வெற்றி பெறுவீர்கள். திடீர் பணவரவு உண்டு. தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும். சகோதரங்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். நிலுவையிலிருந்த வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். தாயாரின் உடல் நிலை சீராகும். தாய்வழி உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் வீண் சந்தேகம், ஈகோ பிரச்னையால் கணவன் மனைவிக்குள் பிரிவு ஏற்படக்கூடும். கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போங்கள். மனைவிக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகளும் வந்து நீங்கும்.

29.8.2013 முதல் 26.1.2014 மற்றும் 13.4.2014 முதல் 12.6.2014 வரை உங்களின் பாக்ய விரையாதிபதியான குருவின் சாரத்திலேயே குருபகவான் செல்வதால் குடும்பத்தில் நல்லது நடக்கும். குழந்தை பாக்யம் கிடைக்கும். நீண்ட நாட்களாக தரிசிக்க நினைத்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்து உறவாடுவார்கள். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும். சுப நிகழ்ச்சிகள், பொது விழாக்களில் மரியாதைக் கிடைக்கும். பிதுர்வழி சொத்து பிரச்னை முடிவுக்கு வரும்.

13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.03.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் உங்களின் அடிப்படை வசதிகள் பெருகும். வருமானம் உயரும். மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலைக் கிடைக்கும். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். பாதியில் நின்ற வீட்டை கட்டி முடித்து கிரகப்பிரவேசம் செய்வீர்கள். சொந்த ஊரில் செல்வாக்கு கூடும்.

வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி பெரிய முதலீடுகள் செய்ய வேண்டாம். சந்தை நிலவரத்தை தெரிந்து செயல்படப் பாருங்கள். உணவு, டிராவல்ஸ், பப்ளிகேஷன், அழகு சாதனப் பொருட்களால் லாபமடைவீர்கள். உத்யோகத்தில் திறமை இருந்தும், எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லையே என்று ஆதங்கப்பட்டுக் கொண்டேயிருப்பீர்கள். அதிகாரிகளின் ஆதரவுக் கூடும். சக ஊழியர்களின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு சற்று தாமதமாக கிடைக்கும்.

கன்னிப்பெண்களே! எதிர்பார்ப்புகள் நிறைவேறும். காதல் கசந்து இனிக்கும். சிலரின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாற வேண்டாம். உங்கள் ரசனைக்கேற்ப நல்ல வரன் அமையும். போட்டித் தேர்வுகளில் வெற்றி உண்டு.

மாணவ மாணவிகளே! கூடாப்பழக்க முள்ளவர்களின் நட்பை தவிர்க்கப்பாருங்கள். விளையாட்டை தவிர்த்து படிப்பில் ஆர்வம் காட்டுங்கள். கட்டுரை, பேச்சு, இலக்கிய போட்டிகளில் பரிசு பெறுவீர்கள். நீங்கள் விரும்பிய கல்வி நிறுவனத்தில் போராடி இடம் பிடிப்பீர்கள்.

கலைத்துறையினரே! மறைமுகப் போட்டிகள் இருக்கும். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். சம்பள விஷயத்தில் கறாராக இருங்கள்.

இந்த குரு மாற்றம் சோர்வு, சலிப்பு, அலைச்சல், வேலைச்சுமையை தந்தாலும், அனுசரித்துப் போகும் குணத்தால் ஓரளவு வெற்றி பெற வைக்கும்.

# ரிஷபம்

மற்றவர்களுக்கு முன் உதாரணமாக வாழ்ந்துக் காட்டுபவர்களே! இதுவரையில் உங்கள் ராசிக்குள் ஜென்ம குருவாக அமர்ந்து உங்களுக்கு ஏகப்பட்ட மன அழுத்தத்தை தந்து எந்த விஷயத்திலும் முழுமையாக ஈடுபட முடியாமல் தடுத்து நிறுத்தினாரே! எங்குச் சென்றாலும் அவமானங்களையும், விரையங்களையும் ஏற்படுத்தினரே! குடும்பத்திலும் உங்களுக்கென்று ஒரு தனி அங்கீகாரம் இல்லாமல் செய்தாரே! இப்படி பலவகையிலும் உங்களை போராட்டங்களில் சிக்க வைத்து வேடிக்கைப் பார்த்த குருபகவான் 28.05.2013 முதல் 12.06.2014 வரை உள்ள காலக்கட்டத்தில் உங்கள் ராசியை விட்டு விலகி தன வீடான 2ம் வீட்டில் அமர்வதால் எதிர்பார்த்த வகையில் பணம் வந்து எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். குடும்ப ஸ்தானத்தில் குரு அமர்வதால் அமைதியான சூழ்நிலை உண்டாகும். அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக் கட்டும். சந்தேகத்தாலும், ஈகோ பிரச்னையாலும் பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேர்வீர்கள். எப்போது பார்த்தாலும் முக வாட்டத்துடனும், ஒருவித பதட்டத்துடனும் வலம் வந்தீர்களே! இனி அந்த பயம் நீங்கும். முகம் மலரும். தோற்றப் பொலிவுக் கூடும். பெரிய நோய் இருப்பதை போன்ற பிரம்மையிலிருந்து விடுபடுவீர்கள். உடல் நலம் சீராகும். பிள்ளைகள் நல்ல வழிக்கு திரும்புவார்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். முன்கோபத்தால் நல்ல நண்பர்கள், வி.ஐ.பிகளை யெல்லாம் இழந்தீர்கள்! இனி கனிவாக பேசுவீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றி புதுசு வாங்குவீர்கள்.

குரு பகவான் ஆறாவது வீட்டை பார்ப்பதால் எதிர்ப்புகள் அடங்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். அவர்களின் ஆலோசனையால் நீங்கள் புதிய பாதையில் செல்வீர்கள். தோலில் இருந்த நமைச்சல், தேமல், முடி உதிர்தல் நீங்கும். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குருபகவான் எட்டாவது வீட்டை பார்ப்பதால் மூச்சுத் திணறல், மூச்சுப் பிடிப்பு, சளித் தொந்தரவுகள் நீங்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். கோவில் விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். பத்தாவது வீட்டையும் பார்ப்பதால் புது வேலைக் கிடைக்கும். சங்கம், தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வழக்கு சாதகமாகும்.

**குருபகவானின் சஞ்சாரம் :**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்களின் சப்தம&விரையாதிபதியான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் உங்களின் பலவீனத்தை சரி செய்துக் கொள்வீர்கள். கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். மாமனார், மாமியார் உதவுவார்கள். பூர்வீகச் சொத்திலிருந்த வில்லங்கம் பேச்சு வார்த்தை மூலம் சுமுகமாக முடியும். மனைவிவழி உறவினர்களால் நன்மை உண்டு. திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு கூடி வரும். தூக்கமின்மை, கனவுத் தொல்லை விலகும். சகோதரங்களால் பயனடைவீர்கள். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் மறைமுக எதிரிகளை வீழ்த்தும் வல்லமை உண்டாகும். ஷேர் மூலம் பணம் வரும். திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். சொத்து சேரும். வீட்டை விரிவுப்படுத்துவீர்கள்.



29.8.2013 முதல் 12.11.2013 வரை உங்களின் அஷ்டம லாபாதிபதியான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் ஓய்வெடுக்கமுடியாத படி வேலைச்சுமை அதிகரிக்கும். அநாவசியச் செலவுகளை தவிர்க்கப்பாருங்கள். புது பொறுப்புகள், பதவிகளை ஏற்க வேண்டாம். உறவினர், நண்பர்கள் சிலர் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள்.

13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.03.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் இக் காலக்கட்டத்தில் வீண் செலவுகள், எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள், ஒரே நேரத்தில் பல வேலைகளை பார்க்க வேண்டிய சூழ்நிலைகள் வந்துச் செல்லும். நவீன மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள்.

வியாபாரத்தில் கடந்த ஓராண்டு காலமாக ஏற்பட்ட நட்டங்களை சரி செய்வீர்கள். புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். பற்று வரவு உயரும். பழைய பாக்கிகள் வசூலாகும். பெரிய நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பங்குதாரர்களுடன் இருந்த மோதல்கள் விலகும். புது ஏஜெண்டுகளை சேர்ப்பீர்கள். சந்தையில் மதிக்கப்படுவீர்கள். ரியல் எஸ்டேட், கணினி உதிரி பாகங்கள், கெமிக்கல் வகைகளால் ஆதாயமடைவீர்கள்.

உத்யோகத்தில் இதுவரை இருந்து வந்த அவமானங்கள், ஏமாற்றங்கள் இனி நீங்கும். உங்களின் கடின உழைப்பை அதிகாரிகள் புரிந்துக் கொள்வார்கள். வேலையில் ஆர்வம் பிறக்கும். பதவி உயர்வுக்காக உங்களது பெயர் பரிசீலிக்கப்படும். சம்பளம் உயரும். மூத்த அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உங்கள் மீது தொடுக்கப்பட்ட அவதூறு வழக்கில் வெற்றி பெறுவீர்கள். சிலருக்கு அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்திலிருந்து புது வாய்ப்புகள் வரும்.

கன்னிப்பெண்களே! தடைப்பட்ட திருமணம் கூடி வரும். உங்களின் எதிர்பார்ப்புக்கு தகுந்தாற்போல் கணவர் அமைவார். சிலருக்கு வேற்று மாநிலத்தில் வேலைக் கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும்.

மாணவ மாணவிகளே! இனி நினைவாற்றல் கூடும். முன்வரிசையில் அமருவீர்கள். படிப்பில் ஈடுபாடு அதிகரிக்கும். வகுப்பறையில் சக மாணவர்கள் மத்தியில் பாராட்டப்படுவீர்கள். உயர்கல்வியில் அதிக மதிப்பெண்ணுடன் வெற்றி பெற்று எதிர்பார்த்த கல்விப் பிரிவில் சேர்வீர்கள்.

கலைத்துறையினரே! வீண் வதந்திகளிலிருந்து விடுபடுவீர்கள். மூத்த கலைஞர்களின் ஆதரவால் உங்களின் புது முயற்சிகள் வெற்றியடையும். வசதி, வாய்ப்புகள் பெருகும்.

இந்த குரு மாற்றம் தொட்டதையெல்லாம் துலங்க வைப்பதுடன், வாழ்வின் அதிர்ஷ்ட அத்தியாயத்தையும் தொடங்கி வைக்கும்.

# மிதுனம்

கல் மனசுக்காரர்களையும் கனிவான பேச்சால் கரைப்பவர்களே! இதுவரை உங்கள் ராசிக்கு 12ம் வீட்டில் அமர்ந்து வீண் பழி, அலைச்சல், திடீர் பயணங்கள், செலவினங்கள், தூக்கமின்மையை தந்த குருபகவான் 28.05.2013 முதல் 12.06.2014 வரை உங்கள் ராசிக்குள்ளேயே அமர்ந்து ஜென்ம குருவாக அமர்வதால் ஆரோக்யத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். தலைச் சுற்றல், காய்ச்சல், மஞ்சள் காமாலை, இரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைதல் வரக் கூடும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சிய தண்ணீரை அருந்துங்கள். காய், கனி, கீரை வகைகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள். பெரிய நோய் இருப்பதைப் போல் பயம் வந்துப் போகும். மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது நல்லது. மெடிக்ளைம் எடுத்துக் கொள்ளுங்கள். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம். வங்கி கணக்கில் போதிய பணம் இருக்கிற என பார்த்து காசோலை தருவது நல்லது. அலைபேசியில் பேசிக் கொண்டு வாகனத்தை இயக்க வேண்டாம். சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். குடும்பத்திலும் சாதாரணமாகப் பேசப் போய் சண்டையில் முடியும். மனைவி உரிமையுடன் எதையாவது பேசினால் அதை லென்ஸ் வைத்து பார்த்து தப்புக் கண்டு பிடிக்காதீர்கள். கர்ப்பிணிப் பெண்கள் பயணங்களை தவிர்ப்பது நல்லது. முக்கிய பத்திரங்களில் கையெழுத்திடும்போது சட்ட ஆலோசகரை கலந்து பேசுவது நல்லது. உங்கள் திறமை மீது அவ்வப்போது சந்தேகம் வரும். ஆழ்ந்த உறக்கம் இல்லாமல் அடிக்கடி மனஅழுத்தங்களும் வரக்கூடும். குரு பகவான் 7ம் வீட்டையும் பார்ப்பதால் கணவன் மனைவிக்குள் அன்பு குறையாது. திருமணம், சீமந்தம், கிரகப்பிரவேசம் போன்ற சுபச் செலவுகளும் அதிகரிக்கும். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். குரு பகவான் உங்களின் 5ம் வீட்டை பார்ப்பதால் மழலை பாக்யம் கிட்டும். பிள்ளைகளின் உயர் கல்வி, உத்யோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சாதகமாக அமையும். மகள் உங்களைப் புரிந்துக் கொள்வாள். மகனின் அலட்சியப் போக்கு மாறும். பூர்வீக சொத்துப் பங்கு கைக்கு வரும். குடும்பத்தினருடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சகோதரங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். உறவினர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். குரு உங்களின் 9ம் வீட்டை பார்ப்பதால் பணப்புழக்கம் கணிசமாக உயரும். தந்தையாருக்கு இருந்த மருத்துவச் செலவுகள் குறையும். அவருடன் இருந்த மனவருத்தம் நீங்கும். பிதுர்வழி சொத்து பிரச்னை நல்ல விதத்தில் முடியும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.

குருபகவானின் சஞ்சாரம் :

28.5.2013 முதல் 25.6.2013 வரை இக்காலகட்டங்களில் உங்கள் சஷ்டம&லாபாதிபதியான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் மறைமுக எதிர்ப்பு, வீண் செலவுகள், சிறுசிறு அவமானம் வந்துச் செல்லும். கை, காலில் அடிப்படக் கூடும். சொத்து வாங்கும் போது தாய் பத்திரத்தை சரி பார்த்துக் கொள்ளுங்கள். சகோதரங்களால் சங்கடங்கள் வரும். குடும்பத்தினரைப் பற்றி யாரிடமும் குறைவாகப் பேச வேண்டாம். பழைய கடனை நினைத்து கலங்குவீர்கள். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் சின்ன சின்ன மனசஞ்சலங்கள், வீண் டென்ஷன், பிறர் மீது நம்பிக்கையின்மை வந்துச் செல்லும். பூர்வீக சொத்துப் பிரச்னை வெடிக்கும். பிள்ளைகள் இன்னும் கொஞ்சம் கடினமாக உழைத்தால் நல்லது என நினைப்பீர்கள். உங்கள் இளமைக் காலத்துடன் அவர்களை ஒப்பட்டுப் பார்த்து கொஞ்சம் பெருமூச்சு விடுவீர்கள். உறவினர்களுடன் இடைவெளி விட்டு பழகுவது நல்லது.



29.8.2013 முதல் 12.11.2013 வரை உங்களின் சப்தம ஜீவனாதிபதியுமான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் மனைவியுடன் விட்டுக் கொடுத்து போவது நல்லது. கடந்த காலத்தை நினைத்து அவ்வப்போது கொஞ்சம் டென்ஷனாவீர்கள். நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருத்தப்படுவீர்கள். உத்யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். விரும்பத்தாக இடமாற்றம் வரும். மனைவிவழி உறவினர்களுடன் கருத்து மோதல்கள் வரும்.

13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.03.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் வீண் பழி, ஏமாற்றம், பணப்பற்றாக்குறை வந்துச் செல்லும். யாருக்காகவும் சாட்சி, கேரண்டர் கையொப்பமிட வேண்டாம்.

வியாபாரத்தில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும். போட்டிகளை சமாளிக்க கடுமையாக உழைக்க வேண்டி வரும். வேலையாட்களால் விரையம் ஏற்படும். பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். புதிதாக வரும் விளம்பரங்களை பார்த்து அறிமுகமில்லா தொழிலில் முதலீடு செய்ய வேண்டாம். பழைய வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்ளுங்கள். பங்குதாரர்களுடன் சச்சரவுகள் வரும்.

உத்யோகத்தில் வளைந்துக் கொடுத்துப் போவது நல்லது. கூடுதல் நேரம் ஒதுக்கி வேலை பார்க்க வேண்டி வரும். அலுவலகத்தில் அநாவசியப் பேச்சு வேண்டாமே. தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கப்பாருங்கள். நீங்கள் செய்து முடித்த வேலைக்கு வேறு சிலர் உரிமைக் கொண்டாடுவார்கள். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உயரதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

கன்னிப் பெண்களே! காதல் விவகாரங்களில் சிக்காதீர்கள். உயர்கல்வியில் கவனம் செலுத்துங்கள். பெற்றோரை தவறாகப் புரிந்துக் கொள்ளாதீர்கள்.

மாணவ மாணவிகளே! வகுப்பறையில் முன் வரிசையில் அமருங்கள். தெரியாதவற்றை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். விடைகளை எழுதி பாருங்கள். சிலர் விடுதியில் தங்கி படிக்க வேண்டி வரும்.

கலைத்துறையினரே! புதிய நிறுவனத்தில் ஒப்பந்தம் செய்து ஏமாற வேண்டாம். உங்களின் படைப்புகளை போராடி வெளியிட வேண்டி வரும்.

இந்த குரு பெயர்ச்சி உள்மனதில் ஒருவித பயத்தையும், குழப்பத்தையும் தந்தாலும் அவ்வப்போது வளைந்துக் கொடுப்பதன் மூலமாக வெற்றியை தரும்.

# கடகம்

சமயோஜிதமாகவும், சாதுர்யமாகவும் நடந்துக் கொள்பவர்களே! இதுவரை உங்கள் ராசிக்கு லாப வீட்டில் அமர்ந்து ஓரளவு பணவரவை தந்த குருபகவான் இப்போது 28.05.2013 முதல் 12.06.2014 வரை உங்களின் விரைய ஸ்தானமான 12ம் வீட்டில் நுழைவதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். ஷேர் மூலமும் பணம் வரும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் என அடுத்தடுத்து சுபச் செலவுகளும் இருந்துக் கொண்டேயிருக்கும். குடும்ப வருமானத்தை உயர்த்த கூடுதல் நேரம் ஒதுக்கி உழைப்பீர்கள். குடும்பத்தில், கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பழைய நண்பர்களால் உதவியுண்டு. பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். நீண்ட நாட்களாக போக நினைத்த புகழ் பெற்ற அண்டை மாநிலப் புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். கோவில் கும்பாபிஷேகத்திற்கு தலைமை தாங்குவீர்கள். ஆன்மிகப் பெரியோரை சந்தித்து ஆசி பெறுவீர்கள். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். சில நாட்களில் தூக்கம் குறையும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். முன்பின் அறியாதவர்கள் நயமாகப் பேசுகிறார்கள் என்று நம்பி குடும்ப அந்தரங்க விஷயங்களையோ, தன் சொந்த விஷயங்களையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். பழைய நண்பர்களை சந்தித்து கடந்த கால சுகமான அனுபவங்களை பகிர்ந்துக் கொள்வீர்கள். வங்கிக் காசோலையில் முன்னரே கையொப்பமிட்டு வைக்க வேண்டாம். பழைய நூல்கள் படிப்பதில் ஆர்வம் பிறக்கும். பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று நினைப்பீர்கள். தங்க ஆபரணங்களை இரவல் வாங்கவோ, தரவோ வேண்டாம். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள்.

குரு பகவான் உங்கள் சுகஸ்தானத்தைப் பார்ப்பதால் விபத்துகளிலிருந்து மீள்வீர்கள். பழுதாகிக் கிடந்த வாகனத்தை சரி செய்வீர்கள். சிலர் புதுசு வாங்குவீர்கள். தாயாரின் ஆரோக்யம் சீராகும். வீடு கட்ட, வாங்க வங்கிக் கடன் உதவி கிடைக்கும். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். குரு 6ம் வீட்டைப் பார்ப்பதால் மறைமுக எதிர்ப்புகள் அடங்கும். வி.ஐ.பிகளின் நட்பு கிடைக்கும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். குரு 8ம் வீட்டைப் பார்ப்பதால் வேற்றுமதத்தவர், வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. சிலருக்கு வெளி மாநிலத்தில், அயல்நாட்டில் வேலைக் கிடைக்கும். உறவினர்கள் மதிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள்.

**குருபகவானின் சஞ்சாரம் :**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் பிரபல யோகாதிபதியான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் செல்வதால் திடீர் யோகம் உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். புது பொறுப்புகள், பதவிகள் வரும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வி, வேலை கிடைக்கும்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் கட்டிட வேலைத் தொடங்குவீர்கள். அரசாங்க விஷயம் முடியும். என்றாலும் தாயாருக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வந்துப் போகும். வாகனத்தின் ஓட்டுநர் உரிமத்தை சரியான நேரத்தில் புதுப்பிக்க தவறாதீர்கள். போக்குவரத்து விதிகளை மீறி வாகனத்தை இயக்க வேண்டாம். சின்ன சின்ன அபராதத் தொகை செலுத்த வேண்டி வரும்.



29.8.2013 முதல் 12.11.2013 வரை உங்களின் சஷ்டம பாக்யாதிபதியான குருபகவான் தன் சுய நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் புகழ், கௌரவம் உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். குழந்தை பாக்யம் கிடைக்கும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். சுப நிகழ்ச்சி களில் கலந்துக் கொள்வீர்கள். தந்தைவழி உறவினர்களுடன் இருந்த பிணக்குகள் நீங்கும். பூர்வீக சொத்துப் பிரச்னை தீரும்.

13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.03.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். சொத்து வாங்குவீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும்.

வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். வாடிக்கையாளர்களை கவர்ந்திழுக்க கடையை விரிவுபடுத்தி நவீனமயமாக்குவீர்கள். தொழில் ரகசியங்கள் கசியாமல் பார்த்துக் கொள்ளுங்கள். துணி, மின்னணு, மின்சார சாதனங்கள், புரோக்கரேஜ் வகைகளால் லாபமடைவீர்கள். வேலையாட்கள் சில சமயங்கள் பொறுப்பில்லாமல் நடந்துக் கொள்வார்கள். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களை அனுசரித்துப் போங்ஙள். வேற்றுமாநிலம், வெளிநாட்டிலிருப்பவர்களுடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள்.

உத்யோகத்தில் அலட்சியம் வேண்டாம். சக ஊழியர்களின் விடுப்பால் மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். உங்களை சிலர் விமர்சித்துக் கொண்டுதான் இருப்பார்கள். அதையெல்லாம் பொருட்படுத்த வேண்டாம். மூத்த அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருந்தாலும் இரண்டாம் கட்ட அதிகாரியால் சில நெருக்கடிகளை சந்திக்க நேரிடும். நீங்கள் விருப்பப்பட்ட இடத்திற்கே இடமாற்றம் உண்டு.

கன்னிப் பெண்களே! உங்களின் நீண்ட நாள் கனவுகள் நனவாகும். காதல் கைக்கூடும். சிலர் தடைப்பட்ட உயர்கல்வியை தொடரும் வாய்ப்பு வரும். வேலை நிமித்தம் காரணமாக பெற்றோரை விட்டு பிரிவீர்கள். கூடுதல் மொழி கற்பீர்கள். திருமணம் தடைப்பட்டு முடியும்.

மாணவ மாணவிகளே! எல்லாம் தெரிந்தது தானே என்று இருந்துவிடாதீர்கள். விடைகளை எழுதி பாருங்கள். உங்களின் தனித்திறமையை வெளிப்படுத்தி பரிசு, பாராட்டு பெறுவீர்கள்.

கலைத்துறையினரே! மூத்த கலைஞர்களிடம் தொழில் நுணுக்கங்களை கேட்டறிவீர்கள். சம்பள பாக்கி கைக்கு வரும். சின்ன சின்ன வாய்ப்புகள் வந்தாலும் தவற விடாதீர்கள்.

இந்த குரு மாற்றம் புதிய பாதையையும், புதிய அனுபவங்களையும் தருவதுடன் ஓரளவு முன்னேற்றத்தையும் தருவதாக அமையும்.

# சிம்மம்

தொடங்கியதை முடிக்கும் வரை துவளாதவர்களே! இதுவரை உங்கள் தொழில் ஸ்தானத்தில் அமர்ந்து கொண்டு உங்களுக்கு அடுக்கடுக்கான வேலைகளால் மனஇறுக்கத்தையும், உடற் சோர்வையும், பொது இடங்களில் கௌரவக் குறைவான சம்பவத்தால் தலைக்குனிவையும், வீண் பழியையும் ஏற்படுத்திய குருபகவான் 28.05.2013 முதல் 12.06.2014 வரை உங்கள் ராசிக்கு லாப வீடான 11ம் வீட்டில் தொடர்வதால் திக்கு திசையறிந்து இருட்டிலிருந்து வெளியுலகத்திற்கு வருவீர்கள். இனி தொட்ட தெல்லாம் துலங்கும். பல மாதங்களாக அரைக் குறையாக இருந்த காரியங்களையெல்லாம் உற்சாகத்துடன் முடித்துக் காட்டுவீர்கள். சமூகத்தில் ஒருபடி அந்தஸ்து உயரும். அரசாங்க அதிகாரிகள், பிரபலங்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். கணவன் மனைவிக்குள் தாம்பத்யம் இனிக்கும். ஏளனமாகவும், இழிவாகவும் திட்டியவர்கள் எல்லாம் இனி உங்களை பாராட்டுவார்கள். மூத்த சகோதர வகையில் இருந்த பிணக்குகள் நீங்கும். சகோதரிக்கு திருமணம் நிச்சயமாகும். பிள்ளைகளை கூடாப்பழக்க வழக்கங்களிலிருந்து மீட்பீர்கள். உங்களின் அருமையைப் புரிந்துக் கொள்வார்கள். புது பதவிகள், பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள்.

உங்கள் ராசிக்கு 7ம் வீட்டை குரு பார்ப்பதால் சோர்வு, களைப்பு நீங்கி சுறுசுறுப்பாவீர்கள். சவாலான வேலைகளையும் சர்வ சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். புது வீடு கட்டி குடிப்புகுவீர்கள். கனிவான பேச்சால் வி.ஐ.பிகள் மனதில் இடம் பிடிப்பீர்கள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த அயல்நாட்டுப் பயணம் சாதகமாக அமையும். உங்களின் 3ம் வீட்டை குரு பார்ப்பதால் இளைய சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் சேரும். வழக்கில் வெற்றி உண்டு. உங்கள் ரசனைக் கேற்ப வீடு, வாகனம் அமையும். குழந்தை பாக்யம் கிடைக்கும். சொந்த பந்தங்கள் மெச்சும்படி மகளின் திருமணமத்தை சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். மகனின் அலட்சியப் போக்கு மாறும். இனி பொறுப்பாக நடந்துக் கொள்வார். பூர்வீக சொத்தை புதுப்பிக்கும் முயற்சியில் இறங்குவீர்கள். குடும்பத்துடன் குலதெய்வக் கோவிலுக்கு சென்று காணிக்கை செலுத்துவீர்கள்.

**குருபகவானின் சஞ்சாரம் :**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் சுக பாக்யாதிபதியான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் வீட்டில் கூடுதல் அறை அல்லது தளம் கட்டுவீர்கள். வங்கி லோன் கிடைக்கும். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். கடன் பிரச்னைகள் கட்டுப்பாட்டிற்குள் வரும். அவருடன் இருந்த மனஸ்தாபம் விலகும். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் இக்காலக்கட்டத்தில் பெரிய திட்டங்கள் நிறைவேறும். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். ஹிந்தி, தெலுங்கு பேசுபவர்களால் ஆதாயம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

29.8.2013 முதல் 12.11.2013 வரை உங்கள் பூர்வ புண்ய&அஷ்டமாதிபதியான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் பணவரவு உண்டு. சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். விலை உயர்ந்த தங்க ஆபரணம் வாங்குவீர்கள். பிள்ளைகளால் அலைச்சல், செலவுகள் ஏற்படும். கர்ப்பிணிப் பெண்கள் படிகளில் ஏறுவது, இறங்குவதோ அல்லது எடைமிகுந்த பொருட்களையோ சுமக்கவோ வேண்டாம். பூர்வீக சொத்துப் பிரச்னை வெடிக்கும். திடீர் பயணங்கள், செலவுகள் வரும். வாகனத்தில் செல்லும் போது கவனத்தை சிதற விடாதீர்கள். பழைய கடனைத் தீர்க்க புது வழி கிடைக்கும்.



13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.03.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் இக் காலக்கட்டத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். யாருக்காகவும் உறுதிமொழி தர வேண்டாம். அநாவசியமாக மற்றவர்கள் விவகாரத்தில் தலையிடாதீர்கள். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். காய்ச்சல், யூரினரி இன்பெக்ஷன் வந்துச் செல்லும். ஆனால் பணப்புழக்கம் அதிகரிக்கும். செல்வாக்குக் கூடும்.

வியாபாரத்தில் புதிதாக முதலீடு செய்து போட்டியாளர்களை திக்குமுக்காட வைப்பீர்கள். பெரிய நிறுவனங்களுடன் புது ஒப்பந்தம் செய்வதன் மூலம் உங்கள் நிறுவன புகழ் கூடும். வியபார சங்கத்தில் முக்கிய பொறுப்பில் அமர்வீர்கள். கடையை உங்கள் ரசனைக் கேற்ப மாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வேகமாக வசூலாகும். பங்குதாரர்களால் இருந்த பிரச்னைகள் ஓயும். புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். கம்யூனிகேஷன், புத்தகம், ஷேர், கட்டுமானப் பொருட்களால் லாபமடைவீர்கள்.

உத்யோகத்தில் உங்களுக்கு எதிராக செயல்பட்ட அதிகாரி வேறு இடத்திற்கு மாற்றப்படுவார். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். மூத்த அதிகாரிகளின் பலம் எது பலவீனம் எது என்பதை உணர்ந்து அதற்கேற்ப உங்களின் நடவடிக்கைகளை மாற்றிக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்தபடி சம்பளம் உயரும், சலுகைகளும் கிடைக்கும். வெளிநாட்டு நிறுவனங்களில் நல்ல வாய்ப்புகள் தேடி வரும்.

கன்னிப்பெண்களே! அழகு, ஆரோக்யம் கூடும். தோழிகளுக்கெல்லாம் திருமணம் முடிந்து விட்டதே, நமக்கில்லையே என்று கலங்காதீர்கள். தள்ளிப் போய் கொண்டிருந்த கல்யாணம் சிறப்பாக முடியும். புது நட்பு மலரும்.

மாணவ மாணவிகளே! வகுப்பறையில் ஆசிரியர் பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். பொது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்வீர்கள். உயர்கல்வியில் பெற்றி பெறுவீர்கள். ஸ்பெஷல் கோச்சிங் கிளாசஸ் சென்று வருவீர்கள். நுழைவு தேர்விற்கு ஆயத்தமாவீர்கள்.

கலைத்துறையினர்களே! உதாசினப் படுத்திய நிறுவனமே உங்களை அழைத்துப் பேசும். கிசுகிசுத் தொல்லைகள் நீங்கும். சம்பள பாக்கி கைக்கு வரும். அரசு கவுரவிக்கும். மூத்த கலைஞர்கள் உங்களுக்காக பரிந்து பேசுவார்கள்.

இந்த குரு மாற்றம் தொடர் வெற்றிகளையும், அனைத்து வசதி வாய்ப்புகளையும் அள்ளித் தருவதாக அமையும்.

# கன்னி

தீவிர சிந்தனை அதிகமுள்ளவர்களே! இதுவரை உங்கள் ராசிக்கு ஒன்பதாம் வீட்டில் அமர்ந்திருந்து புதிய அனுபவங்களை கற்றுத் தந்து உங்களின் இலக்கை நோக்கி முன்னேற வைத்த குருபகவான் 28.05.2013 முதல் 12.06.2014 வரை உங்களின் 10ம் வீட்டில் அமர்வதால் உத்யோகம், பதவி, கௌரவத்திற்கு பங்கம் வருமே என்றெல்லாம் கலங்க வேண்டாம்! ஓரளவு நன்மையே உண்டாகும். வி.ஐ.பிகளின் ஆதரவுக் கிட்டும். வெளிநாட்டில் சிலருக்கு வேலை அமையும். ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை பார்க்க வேண்டி வரும். சில சமயங்களில் எடுத்த வேலைகளை முழுமையாக முடிக்க முடியாமல் மனஇறுக்கத்திற்கு ஆளாவீர்கள். தாழ்வு மனப்பான்மை தலைத்தூக்கும். குரு உங்கள் ராசிக்கு 2ம் வீட்டை பார்ப்பதால் சாதுர்யமாகவும், இதமாகவும் பேசி காரியம் சாதிப்பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். மழலை பாக்யம் கிடைக்கும். உங்களிடம் கடன் வாங்கி ஏமாற்றியவர்கள் பணத்தை திருப்பித் தருவார்கள். புது வாகனம் வாங்குவீர்கள். குரு ஏழாம் பார்வையால் சுக வீட்டைப் பார்ப்பதால் தாயாருடன் இருந்த மோதல்கள் விலகும். அவருக்கு இருந்த நோய் குணமாகும். வீடு, வாகனம் வாங்க வங்கிக் கடன் உதவி கிடைக்கும். குரு 9ம் பார்வையால் 6ம் வீட்டை பார்ப்பதால் இழுபறி நிலை மாறும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பழைய கடன் பிரச்னையில் ஒன்று தீரும். பிதுர்வழி சொத்து கைக்கு வரும். சங்கம், இயக்கம் இவற்றில் கௌரவப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். அரசால் ஆதாயமடைவீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மகனுக்கு எதிர்பார்த்த குடும்பத்திலிருந்த நல்ல பெண் அமையும். உறவினர், நண்பர்கள் விஷயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம். நியாயம் பேசப் போய் பெயர் கெடும். ஆன்மிக பணிகளை முன்னின்று நடத்துவீர்கள். சகோதரங்களுக்கு இருந்த பிரச்னையை தீர்த்து வைப்பீர்கள்.

குருபகவானின் சஞ்சாரம் :

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் திருதியாதிபதியும் அஷ்டமாதிபதியுமான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் செல்வதால் முன்கோபம், திடீர் செலவுகள், சொத்துப் பிரச்னைகள், சகோதர வகையில் மனவருத்தங்கள் வந்துச் செல்லும். இரத்த அழுத்தம் அதிகரிக்கும். வாகனத்தை இயக்கும் போதும், சாலைகளை கடக்கும் போதும் அலைபேசியில் பேச வேண்டாம்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். பூர்வீக சொத்தை விற்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதகமாக இருப்பார்கள். அவர்களின் நட்பு வட்டத்தை கண்காணியுங்கள். கர்ப்பிணிப் பெண்கள் பயணங்களை தவிர்ப்பது நல்லது.

29.8.2013 முதல் 26.1.2014 மற்றும் 13.4.2014 முதல் 12.6.2014 வரை உங்களின் சுக&சப்தமாதிபதியான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசத்தில் செல்வதால் கணவன்&மனைவிக்குள் மனஸ்தாபம் வந்துப் போகும். எந்த சூழ்நிலையிலும் மனைவியை மரியாதைக் குறைவாக பேச வேண்டாம். மனைவிக்கு மாதவிடாய்க் கோளாறு, பைப்ராய்டு பிரச்னைகள் வந்துச் செல்லும். சிலர் உங்களைப் பற்றி அவதூறுப் பேசுவார்கள். கௌரவக் குறைவான சம்பவங்கள் நிகழக்கூடும். சிறுசிறு அவமானம் ஏற்படும். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். உத்யோகத்தில் அடிக்கடி இடமாற்றம் வந்துச் செல்லும். தாயாருடன் மனத் தாங்கல் வரும். அவருக்கு மருத்துவச் செலவுகள் வந்துப் போகும்.



13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.03.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் பணவரவு, சொத்து சேர்க்கை உண்டு. திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். வேற்று மதத்தவர் வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயம் உண்டு. ஷேர் மூலமும் பணம் வரும். புது வேலைக் கிடைக்கும். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அடகிலிருந்த நகைகளை மீட்பீர்கள்.

வியாபாரத்தில் பெரிய முதலீடுகள் வேண்டாம். பெரியளவில் யாருக்கும் கடன் தர வேண்டாம். அனுபவமிக்க வேலையாட்கள் திடிரென்று பணியை விட்டு விலகுவார்கள். வாடிக்கையாளர்களின் கருத்தைக் கேட்டு கடையை இடமாற்றம் செய்வீர்கள். அயல்நாட்டிலிருப்பவர்கள், திடீரென்று அறிமுகமாகுபவர்களை நம்பி புது தொழில், புது முயற்சிகளில் இறங்க வேண்டாம். பங்குதாரர்கள் கொஞ்சம் ஏடாகூடமாக பேசுவார்கள். ஏற்றுமதி, இறக்குமதி, பெட்ரோ கெமிக்கல் வகைகளால் லாபம் சம்பாதிப்பீர்கள்.

உத்யோகத்தில் வேலைச்சுமை இருக்கும். பாராட்டுகள் இல்லையே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். உங்களுடைய உழைப்பை பயன்படுத்தி வேறு சிலர் நல்ல பெயரெடுத்து முன்னேறுவார்கள். சக ஊழியர்களால் அவ்வப்போது டென்ஷனாவீர்கள். உங்களைவிட அனுபவம் குறைவானவர்கள், வயதில் சிறியவர்களிடமெல்லாம் நீங்கள் அடங்கிப் போக வேண்டிய சூழ்நிலை உருவாகும். மேலதிகாரிகளுடன் பணிந்துப் போங்கள். எதிர்பார்த்த இடமாற்றம், சம்பள சற்று தாமதமாகி கிடைக்கும். சம்பள பாக்கியை போராடி பெறுவீர்கள். சிலர் உங்கள் மீது அவதூறு வழக்குப் போடுவார்கள்.

கன்னிப் பெண்களே! எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில் உயர்கல்வி பெற வாய்ப்புகள் வரும். தள்ளித் தள்ளி போய்க் கொண்டிருந்த கல்யாணம் சிறப்பாக முடியும். பெற்றோரை பகைத்துக் கொள்ள வேண்டாம். காதல் விவகாரங்கள் வேண்டாமே! வெளி நாட்டில் வேலை, மேற்கல்வி அமையும்.

மாணவ மாணவிகளே! சாதித்துக் காட்ட வேண்டுமென்ற வேகம் இருந்தால் மட்டும் போதாது அதற்கான உழைப்பு வேண்டும். தேர்வு நேரத்தில் படித்துக் கொள்ளலாம் என்று தப்புக் கணக்கு போடாதீர்கள். கணிதம், அறிவியல் பாடங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.

கலைத்துறையினரே! இழந்த புகழை மீண்டும் பெற எதார்த்தமான படைப்புகளை கொடுங்கள். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

இந்த குருமாற்றம் பணத்தின் அருமையை அறிய வைப்பதாகவும், வெற்றி பெற சகிப்புத் தன்மையையும், பொறுமையும் அவசியம் என்பதை உணர்த்துவதாகவும் அமையும்.

# துலாம்

விறுவிறுப்பையும், உண்மையையும் நேசிப்பவர்களே! இதுவரை உங்கள் ராசிக்கு எட்டில் மறைந்துக் கொண்டு ஏகப்பட்ட தொந்தரவுகளையும், தோல்வி பயத்தையும், மன உளைச்சல்களையும் கொடுத்து வந்த குருபகவான் 28.05.2013 முதல் 12.06.2014 வரை உங்களின் பாக்ய ஸ்தானமான 9ம் வீட்டில் அமர்வதால் இனி தொலை நோக்குச் சிந்தனையால் எதையும் சாதிப்பீர்கள். தாழ்வுமனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். 'ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் வீட்டில் குரு' என்ற பழமொழிக்கேற்ப திடீர் சொல்வாக்கையும், வசதி, வாய்ப்புகளையும் தருவார். பணப்புழக்கம் அதிகரிக்கும். குருபகவான் தனது 5ம் பார்வையால் உங்கள் ராசியை பார்ப்பதால் புதிய திட்டங்கள் நிறைவேறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து இனி சேமிக்கத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பங்கள் விலகும். கணவன் மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். இருவரும் மனம் விட்டு சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். பூர்வீக சொத்துப் பங்கை கேட்டு வாங்குவீர்கள். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்று வீர்கள். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனின் கூடா நட்பு விலகும். சகோதரங்கள் உங்களின் உண்மையான பாசத்தை உணருவார்கள். சொந்த பந்தங்களின் சுயரூபம் தெரிந்து இனி நடந்துக் கொள்வீர்கள். குரு பகவான் உங்களின் 3ம் வீட்டை பார்ப்பதால் எங்குச் சென்றாலும் நல்ல வரவேற்பு கிடைக்கும். அதிக வட்டிக் கடனை குறைந்த வட்டிக் கடன் பெற்று பைசல் செய்வீர்கள். வீட்டில் தள்ளிப் போய் கொண்டிருந்த சுப நிகழ்ச்சிகள் நல்ல விதத்தில் முடிவடையும். ஊர் பொதுக் காரியங்களில் ஈடுபட்டு அவற்றை வெற்றிகரமாக முடிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். நெடுநாள் கனவாக இருந்த வீடு வாங்கும் ஆசை இப்போது நிறைவேறும். இளைய சகோதரங்கள் ஆதரவாக இருப்பார்கள். நவீன ரக வாகனம் வாங்குவீர்கள்.

**குருபகவானின் சஞ்சாரம் :**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் தன சப்தமாதிபதியுமான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் செல்வதால் எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அனுபவப் பூர்வமாகப் பேசி எல்லோர் மனதிலும் இடம் பிடிப்பீர்கள். வழக்கு சாதகமாகும். பதவிகள் தேடி வரும். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். என்றாலும் மனைவியுடன் ஈகோ பிரச்னை வரக்கூடும். அவருக்கு கர்ப்பப்பை கட்டி, ஹார்மோன் கோளாறு வந்துச் செல்லும். சொத்து விவகாரத்தில் அலட்சியம் வேண்டாம். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் நெஞ்சு எரிச்சல், வாயுக் கோளாறு, தலைச் சுற்றல், சிறுநீர் பாதையில் அலர்ஜி வந்துச் செல்லும். எளிதில் செரிமானமாகக் கூடிய உணவுகளை உட் கொள்ளுங்கள். கணவன் மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யோகா, தியானத்தில் மனம் லயிக்கும். எதிர்பார்த்த பணம் வரும். முன்னேற்றம் தடைபடாது.

29.8.2013 முதல் 26.1.2014 மற்றும் 13.4.2014 முதல் 12.6.2014 வரை உங்களின் திருதியாதிபதியும் சஷ்டமாதி பதியுமான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் இனந்தெரியாத கவலைகள் வந்துச் செல்லும். சிலர் உங்களை தவறான போக்கிற்கு தூண்டு வார்கள். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். என்றாலும் செல் வாக்குக் கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சொத்து சேரும்.



13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.03.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் குடும்பத்தில் சலசலப்புகள் வந்துச் செல்லும். யாரும் தன்னை சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை, தன்னை யாரும் மதிக்கவில்லை என்றெல்லாம் சில நேரங்களில் நினைப்பீர்கள். ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கடனாக கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும்.

வியாபாரத்தில் தரமான சரக்குகளை மொத்த விலையில் வாங்க முடிவு செய்வீர்கள். வேலையாட்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சந்தை ரகசியங்களை தெரிந்துக் கொள்வீர்கள். கடையை நவீனமாக்குவீர்கள். முக்கிய பிரமுகர்களின் அறிமுகத்தால் புது ஆடர்கள், ஏஜென்டுகள் வரும். வாடிக்கை யாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர் பணிந்து வருவார். உங்களுக்கு முழு ஒத்துழைப்பு தரக்கூடிய பங்குதாரரும் அறிமுகமாவார். ரியல் எஸ்டேட், சிமெண்ட், கண்ணாடி வகைகளால் ஆதாயமடைவீர்கள்.

உத்யோகத்தில் ஆர்வம் இல்லாமல் இருந்தீர்களே! இனி விரும்பி பணி புரிவீர்கள். உங்களை குறை சொல்லிக் கொண்டிருந்த உயரதிகாரி இனி உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கொடுப்பார். மூத்த அதிகாரிகள் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். எதிர்பார்த்தபடி சம்பளம் உயரும், சலுகைகளும் கிடைக்கும். வெளி நிறுவனங்களில் நல்ல வாய்ப்புகள் தேடி வரும். சக ஊழியர்களுடன் இருந்த பனிப்போர் நீங்கும். உத்யோகம் சம்பந்தப்பட்ட வழக்குகள் சாதகமாக முடியும்.

கன்னிப்பெண்களே! வயிற்றுவலி, முகப்பரு, கண்ணுக்குக் கீழே இருந்த கருவளையம் விலகும். கல்யாணம் சிறப்பாக முடியும். புது வேலைக் கிடைக்கும். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.

மாணவ&மாணவிகளே! நினைவாற்றல் கூடும். உயர்கல்வியில் வெற்றியுண்டு. ஆசிரியர்களின் அன்பை பெறுவீர்கள். நல்ல நண்பர்கள் அறிமுகமாவார்கள். விரும்பிய பாடப்பிரிவில் சேர்வீர்கள். உங்களுடன் போட்டி, பொறாமை யுடன் பழகிய சில மாணவர்கள் வலிய வந்துப் பேசுவார்கள்.

கலைத்துறையினரே! கிடைக்கின்ற வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக் கொள்வீர்கள். உங்களின் படைப்பு களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும். கற்பனைத் திறன் வளரும்.

இந்த குரு மாற்றம் சமூகத்தில் உங்களுக்கென்று ஒரு அங்கீகாரத்தை தருவதுடன் பணம், பதவியையும் தந்து உயர்த்தும்.

# விருச்சிகம்



தனக்கென தனிப்பாதை அமைத்துக் கொள்பவர்களே! இதுவரை உங்கள் ராசிக்கு 7ம் வீட்டில் அமர்ந்து ஓரளவு பண வரவையும், குடும்பத்தில் மகிழ்ச்சியையும், அமைதியையும் தந்த குருபகவான் 28.05.2013 முதல் 12.06.2014 வரை 8ம் வீட்டில் மறைவதால் உங்களின் இலக்கை போராடி எட்டிப் பிடிக்க வேண்டி வரும். புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். கணவன் மனைவிக்குள் அன்யோனம் அதிகரிக்கும். எந்த பிரச்னையாக இருந்தாலும் மனம் விட்டு பேசுவது நல்லது. சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் இருந்துக் கொண்டேயிருக்கும். சில வேலைகளை உங்கள் மேற் பார்வையில் முடிப்பது நல்லது. இடைத்தரகர்களை நம்பாதீர்கள். பழைய கடன் பிரச்னை அவ்வப்போது மனசை வாட்டும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகளும் இருக்கும். அடிக்கடி வெளியூர் பயணங்கள் அதிகரிக்கும். அவ்வப்போது தூக்கம் குறையும். ஸ்திர ராசியில் பிறந்த உங்களுக்கு குருபகவான் உபய வீட்டில் மறைவதால் நல்லதே நடக்கும். சாணக்கியத்தனமாகப் பேசி பல நெருக்கடிகளிலிருந்து விடுபடுவீர்கள்.

குருபகவான் 2ம் வீட்டை பார்ப்பதால் வர வேண்டிய பணம் கைக்கு வரும். குடும்பத்தில் நல்லது நடக்கும். பிள்ளைகள் உங்கள் மனங்கோணாமல் நடந்துக் கொள்வார்கள். மனைவிவழி உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். இழுபறியாக இருந்த அரசு காரியங்கள் விரைந்து முடியும். பூர்வீக சொத்தை மாற்றி உங்கள் ரசனைக்கேற்ப வீடு வாங்குவீர்கள். தங்க ஆபரணங்கள், வெள்ளிப் பொருட்கள் வாங்குவீர்கள். குரு உங்கள் சுக ஸ்தானத்தைப் பார்ப்பதால் அசதி, சோர்வு, டென்ஷன் விலகும். தாயாரின் உடல் நிலை சீராகும். அவருடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும். தாய்வழி சொத்துப் பிரச்னை தீரும். பழைய வாகனத்தை விற்று புதிதாக வாங்குவீர்கள். பழைய உறவினர், நண்பர்களை சந்திப்பீர்கள். கோவிலை புதுப்பிக்க உதவுவீர்கள்.

**குருபகவானின் சஞ்சாரம் :**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் ராசிநாதனான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் செல்வதால் அழகு, இளமைக் கூடும். பேச்சில் கம்பீரம் தெரியும். குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சகோதரங்கள் உங்கள் வளர்ச்சி பக்கபலமாக இருப்பார்கள்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் மனோபலம் அதிகரிக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். சுப நிகழ்ச்சிகள், பொது விழாக்களில் முதல் மரியாதைக் கிடைக்கும். வேற்றுமதத்தவர்கள், வெளி நாட்டிலிருப்பவர்களால் திடீர் திருப்பம் உண்டாகும். பூர்வீக சொத்தை சீர் செய்வீர்கள். புது வேலைக் கிடைக்கும். நிலுவையிலிருந்த வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். மனைவியின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றுவீர்கள்.

29.8.2013 முதல் 26.1.2014 மற்றும் 13.4.2014 முதல் 12.6.2014 வரை உங்களின் தன பூர்வ புண்யாதிபதியான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் இக்காலக்கட்டத்தில் எதிலும் வெற்றி கிட்டும். வி.ஐ.பிகளின் நட்பு கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். மகளுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வி, உத்யோகம் அமையும். மகனுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். கெட்ட நண்பர்களிடமிருந்து விடுபடுவீர்கள்.

13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.03.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் இக்காலக்கட்டத்தில் உங்களிடம் இருக்கும் சின்ன சின்ன பலவீனங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வருவீர்கள். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். பெரிய பதவி, பொறுப்புகளுக்கு உங்களது பெயர் பரிந்துரை செய்யப்படும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். இளைய சகோதரியின் திருமணத்தை நடத்துவீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் கொடுத்த வாக்குறுதியை கடைசி நேரத்தில் நிறைவேற்றிவிடுவீர்கள்.

வியாபாரத்தில் சில புதிய அனுபவங்கள் கிடைக்கும். மறைமுகப் போட்டிகள் அதிகரிக்கும். யாருக்கும் அதிக முன் பணம் தர வேண்டாம். பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். சந்தை நிலவரத்தையும் உன்னிப்பாக கவனியுங்கள். வேலையாட்களின் குறை, நிறைகளை சுட்டிக் காட்டி அன்பாக திருத்துங்கள். இங்கிதமாகப் பேசி வாடிக்கையாளர்களை கவருவீர்கள். சொந்த இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். வங்கிக் கடன் தவணையை தாமதித்து செலுத்த வேண்டி வரும். பங்குதாரர்களால் இருந்த கெடுபிடிகள் விலகும். இனி உதவிகரமாக இருப்பார்கள். மூலிகை, தேங்காய் மண்டி, எலக்ட்ரிக்கல், துரித உணவகங்களால் லாபமடைவீர்கள்.

உத்யோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். முன்பு உங்களுக்கு எதிராக செயல்பட்ட அதிகாரி இப்போது உங்களை ஆதரிப்பார். உங்களுடைய தொலை நோக்குச் சிந்தனைக்கு பாராட்டுகள் கிடைக்கும். சக ஊழியர்களிடம் அளவாகப் பழகுங்கள். சட்டத்திற்கு புறம்பான வகையில் யாருக்கும் உதவ வேண்டாம். புது சலுகைகளும், பதவிகளும் வரும். சம்பள பாக்கி கைக்கு வரும்.

கன்னிப் பெண்களே! காதல் விவகாரத்தில் தள்ளி இருங்கள். உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள். திருமணம் தாமதமாகி முடியும். வேற்றுமதத்தவர்கள் தோழிகளாக அறிமுகமாவார்கள்.

மாணவ மாணவிகளே! அரட்டைப் பேச்சை தவிருங்கள். சந்தேகங்களை கேட்பதில் தயக்கம் வேண்டாம். கணக்கு கொஞ்சம் கசக்கும். கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பரிசு,பாராட்டு பெறுவீர்கள். ஆசிரியரின் ஆதரவு உண்டு.

கலைத்துறையினரே! உங்களின் படைப்புகளுக்கு வேறு சிலர் உரிமைக் கொண்டாடுவார்கள். பெரிய நிறுவனங்களிலிருந்து புதிய வாய்ப்புகள் தேடி வரும். அரசால் அனுகூலம் உண்டு.

இந்த குருப்பெயர்ச்சி ஒரு பக்கம் பணவரவையும், மறுபக்கம் கூடுதல் செலவுகளையும், அலைச்சலையும் தருவதாக இருந்தாலும் மகிழ்ச்சிப்படுத்துவதாகவும்அமையும்.

# தனுசு

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாதவர்களே! இதுவரை உங்களுக்கு எதிரி வீடான சுக்ரனின் ஆறாம் வீட்டில் அமர்ந்திருந்து வெளியில் சொல்ல முடியாதபடி பல நெருக்கடிகளையும், சிக்கல்களையும், வேலைச்சுமையையும், அவமானங்களையும் தந்த குருபகவான் 28.05.2013 முதல் 12.06.2014 வரை உங்கள் ராசிக்கு 7ம் வீட்டில் அமர்ந்து உங்களை பார்க்க இருப்பதால் உங்களிடம் மறைந்துக் கிடந்த திறமைகளையெல்லாம் வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேருவீர்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு கூடி வரும். வெற்றி பெற்ற மனிதர்களின் நட்பு கிடைக்கும். நகர எல்லையைத் தாண்டி வீட்டு மனை வாங்குவீர்கள். குடும்பத்தினருடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சங்கம், டிரஸ்டில் கௌரவப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப் படுவீர்கள். அயல்நாட்டு தொடர்புடைய நிறுவனத்தில் வேலைக் கிடைக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். குருபகவான் லாப வீட்டை பார்ப்பதால் உங்களின் ஆளுமைத் திறன், நிர்வாகத் திறன் அதிகரிக்கும். சோர்ந்திருந்த நீங்கள் உற்சாகமடைவீர்கள். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். ஷேர் மூலம் பணம் வரும். மூத்த சகோதரங்களால் உதவிகள் கிட்டும். வேற்றுமதத்தவர்களால் பயனடைவீர்கள். உங்கள் ராசிக்கு 3&ம் வீட்டை குரு பார்ப்பதால் எங்குச் சென்றாலும் மதிக்கப்படுவீர்கள். தன்னிச்சையாக சில முடிவுகள் எடுப்பீர்கள். கோவில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும்.

**குருபகவானின் சஞ்சாரம் :**

**28.5.2013** முதல் **25.6.2013** வரை உங்கள் பூர்வ புண்யாதிபதியும்&விரையாதிபதியுமான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் செல்வதால் திடீர் யோகம் உண்டாகும். புதிதாக வீடு, மனை வாங்குவீர்கள். பழைய கடன் பிரச்னை தீரும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். மகளின் திருமணத்தை விமர்சையாக முடிப்பீர்கள். சகோதரங்கள் உங்கள் உதவியை நாடுவார்கள். வாகன வசதிப் பெருகும். தூரத்து சொந்தம் தேடி வரும்.

**26.6.2013** முதல் **28.8.2013** வரை மற்றும் **27.1.2014** முதல் **12.4.2014** வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் உங்களின் புகழ், கௌரவம் உயரும். பிதுர்வழி சொத்து கைக்கு வரும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வேற்றுமதத்த வர்கள், வெளிநாட்டிலிருப்பவர்களால் உதவிக் கிடைக்கும். நவீன ரக கேமரா செல்போன் வாங்குவீர்கள். மனைவிவழியில் நல்ல செய்தி உண்டு.

**29.8.2013** முதல் **12.11.2013** வரை உங்களின் ராசிநாதனும் சுகாதிபதியுமான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் வீட்டை இடித்து புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். தள்ளிப் போன காரியங்கள் உடனே முடியும். திருமணம், சீமந்தம், கிரகப்பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். தாயாருக்கு இருந்த முதுகு வலி, மூட்டு வலி நீங்கும். புது வேலைக் கிடைக்கும்.



**13.11.2013** முதல் **26.1.2014** வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் **27.1.2014** முதல் **11.03.2014** வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் இக்காலக்கட்டத்தில் நினைத்தது நிறைவேறும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பூர்வீக சொத்து கைக்கு வரும். பிரபலங் களுக்கு நெருக்கமாவீர்கள். சிலர் நல்ல காற்றோட்டம், குடி நீர் வசதியுள்ள வீட்டிற்கு மாறுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.

வியாபாரத்தில் முடங்கிக் கிடந்த நீங்கள் புத்துயிர் பெறுவீர்கள். அதிரடி லாபம் உண்டு. பெரிய வாய்ப்புகளும் வரும். பாக்கிகளும் வசூலாகும். கடையை விரிவுபடுத்தி நல்ல வேலையாட்களை பணியில் அமர்த்துவீர்கள். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். பணியாட்களிடம் கறாராக இருங்கள். தள்ளிப் போன ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். சந்தையில் உங்கள் நிறுவனத்தின் மதிப்புக் கூடும். வர்த்தக சங்கத்தில் பதவி கிடைக்கும். புதிய கிளைகள் தொடங்குவீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களுடன் இருந்த பிரச்னைகள் ஓயும். விலகிச் சென்ற பங்குதாரர் மீண்டும் வந்து இணைவார். பெட்ரோல், மருந்து, ஷேர், ஸ்பெகுலேஷன் வகைகளால் ஆதாயம் உண்டு.

உத்யோகத்தில் வேலைச்சுமை குறையும். உங்களை குறை சொன்னவர்களெல்லாம் இனி புகழ்வார்கள். உங்களின் மாறுபட்ட அணுகுமுறையால் மேலதிகாரியை வியக்க வைப்பீர்கள். உங்களின் உழைப்பிற்கு அங்கீகாரமும் கிடைக்கும். சக ஊழியர்களுடன் இருந்து வந்த பனிப்போர், ஈகோ பிரச்னைகள் நீங்கும். நீண்ட நாளாக கேட்டுக் கொண்டிருந்த இடம் மாற்றம் கேட்ட இடத்திற்கே கிடைக்கும். எதிர்பார்த்த சம்பள உயர்வு, பதவி உயர்வு தடையின்றி வரும்.

கன்னிப் பெண்களே! விரக்தி, சோம்பலில் இருந்து மீள்வீர்கள். காதல் கனியும். திருமணமும் வெகு விமர்சையாக முடியும். வேலையில்லாதவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். பெற்றோர் பாசமழைப் பொழிவார்கள்.

மாணவ மாணவிகளே! நல்ல நண்பர்கள் அறிமுகமாவார்கள். வகுப்பறையில் கூடுதல் மதிப்பெண் பெறுவீர்கள். சக மாணவர்களின் சந்தேகத்தை தீர்த்து வைப்பீர்கள். இசை, இலக்கியம், ஓவியப் போட்டிகளில் பரிசு பெறுவீர்கள்.

கலைத்துறையினரே! வேற்றுமொழி வாய்ப்புகளால் புகழடைவீர்கள். உங்களின் கலை மற்றும் படைப்புத் திறன் வளரும். மூத்த கலைஞர்களை மதிப்பீர்கள். எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கும்.

இந்த குரு பெயர்ச்சி உங்களை விஸ்வரூபம் எடுக்க வைப்பதுடன், நினைத்ததை நிறைவேற்றிக் காட்டும் வல்லமையையும் தருவதாக அமையும்.

# மகரம்



பெற்ற தாய்க்கும், பிறந்த மண்ணுக்கும் முதல் மரியாதை தருபவர்களே! இதுவரை உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் அமர்ந்து உங்களின் தேவைகளை பூர்த்தி செய்து, அடிப்படை வசதிகளை உயர்த்திய குருபகவான் 28.05.2013 முதல் 12.06.2014 வரை 6ம் வீட்டில் மறைவதால் சின்ன சின்ன எதிர்ப்புகள் எழும்பத்தான் செய்யும். பணம் எவ்வளவு வந்தாலும் பற்றாக் குறையாகி வெளியில் கடன் வாங்க வேண்டி வரும். சகட குருவாக இருப்பதால் குடும்பத்தில் அவ்வப்போது சண்டை வரும். கணவன் மனைவிக்குள் ஒளிவு, மறைவில்லாமல் பழகுவது நல்லது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போவது நல்லது. மனைவி உணர்ச்சிவசப்பட்டு பேசினால் அதைப் பெரிதுப்படுத்திக் கொண்டு பதிலுக்கு பதில், ஏட்டிக்கு போட்டியாக ஏதாவது சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். பிள்ளைகளின் எதிர்பார்ப்புகள் அதிகமாகிக் கொண்டேப் போகும். குடும்பத்தில் மாற்றி மாற்றி மருத்துவச் செலவுகள் வரும். வழக்கை நினைத்து கவலையடைவீர்கள். மற்றவர்கள் உங்களைப் பற்றி குறைவாகவும், தாழ்வாகவும் நினைப்பதாக எண்ணுவீர்கள் அந்த தாழ்வுமனப்பான்மை வேண்டாம். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். இதுநாள் வரை கட்டிக் காப்பாற்றிய கௌரவத்திற்கு பங்கம் வருமோ என்றெல்லாம் நினைப்பீர்கள். போலியானவர்களை கண்டு பிடிப்பதில் ஒரு தடுமாற்றம் இருக்கும். விபத்துகள் அதிகரிக்கும்.

**குருபகவானின் சஞ்சாரம் :**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் சுக லாபாதிபதியுமான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் செல்வதால் தடைகள் ஓரளவு நீங்கும். முக்கிய பதவி, பொறுப்பில் இருப்பவர்களின் நட்பு கிட்டும். சகோதரங்களின் மனசு மாறும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். பழைய கடன் பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வீடு, வாகன வசதிப் பெருகும். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். எப்போதும் மருந்தும், மாத்திரையுமாக இருந்த தாயார் சற்றே குணமடைவார். அவருடன் இருந்த கசப்புணர்வுகள் நீங்கும். பக்கத்து வீட்டுக்காரருடன் பகைமை வந்து நீங்கும்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் கடனாக கேட்ட இடத்தில் பணம் வரும். கடந்த கால சுகமான அனுபவங்களெல்லாம் மனதில் நிழலாடும். சொந்த&பந்தங்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். திருமணம் கூடி வரும். சிறுக சிறுக சேமித்து வைத்ததில் புறநகர் பகுதியிலாவது ஒரு கால் கிரவுண்டு வீட்டு மனை வாங்க முயற்சி செய்வீர்கள். உத்யோகத்தில் வேலைச்சுமை, விரும்பத்தகாத இடமாற்றம் வந்துச் செல்லும். சிறுசிறு விபத்துகள் வரும். வாகனப் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும்.

29.8.2013 முதல் 26.1.2014 மற்றும் 13.4.2014 முதல் 12.6.2014 வரை உங்களின் திருதியாதிபதியும் விரையாதிபதியும் குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் வீட்டில் தள்ளிப் போன சுப காரியங்களும் ஏற்பாடாகும். பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும். பிள்ளைகளால் அலைச்சலும், செலவினங்களும் அதிகரிக்கும். வீடு கட்டுவதற்கு வங்கிக் கடன் தாமதமாக கிடைக்கும். அவ்வப்போது உணர்ச்சிவசப்படுவீர்கள். யாரையும் யாருக்கும் சிபாரிசு செய்ய வேண்டாம். பணம், விலை உயர்ந்த நகையை கவனமாக கையாளுங்கள். அரசு செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம். இளைய சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும்.

13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.03.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். குழந்தை பாக்யம் கிடைக்கும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலைக் கிடைக்கும். பயணங்களால் ஆதாயமடைவீர்கள். இழுபறியாக இருந்த அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். வெளிவட்டாரத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்த உறவினர்கள் வலிய வந்துப் பேசுவார்கள்.

வியாபாரம் சுமார்தான், போட்டிகளால் விழி பிதுங்குவீர்கள். மற்றவர்களை நம்பி பெரிய முதலீடுகள் செய்யாதீர்கள். தள்ளுபடி விற்பனை மூலமாகவும், விளம்பர யுக்திகளை கையாண்டும் லாபம் அதிகரிக்க செய்வீர்கள். அக்கம்&பக்கம் கடைக்காரருடன் சண்டை, சச்சரவுகள் வந்து நீங்கும். வேலையாட்களிடம் கறாராக இருக்க வேண்டாம். தொழில் ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். அரசாங்கத்தை எதிர்த்துக் கொள்ளாதீர்கள். பங்குதாரர்களை மாற்ற வேண்டி வரும். மர வகைகள், ஸ்டேஷனரி, பதிப்பகங்களால் லாபமடைவீர்கள். வியாபார விஷயமாக வழக்கு, நீதிமன்றம் செல்ல வேண்டாம். எதுவாக இருந்தாலும் பேசி தீர்ப்பது நல்லது.

உத்யோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். சக ஊழியர்களின் விடுப்பால் மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். ஆனால் மூத்த அதிகாரிகளின் பாராட்டுதலால் ஆறுதல் கிடைக்கும். எல்லா நேரமும் கறாராக பேசாமல் கொஞ்சம் கலகலப்பாகவும் பேசக் கற்றுக் கொள்ளுங்கள். அலுவலகம் சம்பந்தமாக வெளி மாநிலம், அயல்நாடு செல்ல வேண்டி வரும். எதிர்பார்த்த சலுகைகளையும், சம்பள பாக்கியையும் போராடி பெறுவீர்கள்.

கன்னிப் பெண்களே! காதல் கசந்து இனிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். நேர்முகத் தேர்வில் போராடி வெற்றி பெற்று புது வேலையில் அமர்வீர்கள். திருமணம் தாமதமாகும்.

மாணவ மாணவிகளே! உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தி படியுங்கள். விடைகளையும் எழுதி பாருங்கள். நண்பர்களுடன் மனஸ்தாபங்கள் வெடிக்கும். விட்டுக் கொடுத்து போங்கள். விளையாடும் போது காயம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

கலைத்துறையினரே! உங்களின் தனித்திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். உங்களின் புது முயற்சிகள் மூத்த கலைஞர்களின் ஆதரவால் வெற்றியடையும். கிசுகிசு தொல்லைகளால் டென்ஷனாவீர்கள்.

இந்த குரு மாற்றம் சிறுசிறு ஏமாற்றங்களையும், பணப்பற்றாக்குறையையும், சிக்கன நடவடிக்கையால் ஓரளவு முன்னேற்றத்தையும் தருவதாக அமையும்.

# கும்பம்

மறப்போம், மன்னிப்போம் என்ற குணம் கொண்டவர்களே! இதுவரை உங்களின் ராசிக்கு சுகவீடான 4ம் வீட்டில் அமர்ந்து பல கசப்பான அனுபவங்களை தந்து, நாலாபுறத்திலும் பந்தாடிய குருபகவான் 28.05.2013 முதல் 12.06.2014 வரை உங்களின் பூர்வ புண்ய ஸ்தானமான 5ம் வீட்டில் அமர்வதால் உங்களின் வசதி, வாய்ப்புகளையும், வாழ்க்கை தரத்தையும் ஒருபடி உயர்த்துவார். இனி சந்தோஷம் பெருக்கெடுக்கும். குடும்பத்தில் எப்போது பார்த்தாலும் புயல் வீசுவதுப் போல ஒரு சலசலப்பு இருந்துக் கொண்டிருந்ததே! இனி வசந்தம் வீசும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். குழந்தை இல்லாமல் கோவில், குளமென்றும் என்று சுற்றிக் கொண்டிருந்த தம்பதியர்களுக்கு குழந்தை பாக்யம் உண்டாகும். தாயாருக்கு இருந்த நோய் குணமடையும். அவருடன் இருந்து வந்த கருத்து மோதல் நீங்கும். குடும்பத்தினருடன் குலதெய்வ கோவிலுக்கு சென்று முடிந்து வைத்திருந்த காணிக்கையை செலுத்து வீர்கள். உயர்கல்வி, உத்யோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் பலிதமாகும். தாழ்வுமனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். உறவினர்களுடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். பூர்வீக சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும். அரசாங்க அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். குரு பகவான் உங்கள் ராசியை பார்ப்பதால் உங்கள் ரசனை மாறும். சுருங்கியிருந்த உங்கள் முகம் மலரும். சபைகளில் முதல் மரியாதைக் கிடைக்கும். பாகப்பிரிவினை சுமூகமாக முடியும். புது வீட்டில் குடிப்புகு வீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.

குரு ஐந்தாம் பார்வையால் உங்களின் 9ம் வீட்டை பார்ப்பதால் தந்தையுடனான மனத்தாங்கல் நீங்கும். இருவரும் மனம் விட்டு பேசுவீர்கள். தந்தைவழி உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். வெளிநாடு சென்று வருவீர்கள். பதினோறாவது வீட்டை குரு பார்ப்பதால் மூத்த சகோதரர், சகோதரிகள் ஆதரவாக இருப்பார்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வேலைக்கு விண்ணப்பித்து காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**குருபகவானின் சஞ்சாரம் :**

**28.5.2013** முதல் **25.6.2013** வரை உங்கள் திருதியாதி பதியும் ஜீவனாதிபதியுமான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் செல்வதால் எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பணவரவு அதிகரிக்கும். வாகனம் வாங்குவீர்கள். சகோதரங்கள் உறுதுணையாக இருப்பார்கள். சட்டத்திற்கு புறம்பான வகையில் யாருக்கும் உதவ வேண்டாம்.

**26.6.2013** முதல் **28.8.2013** வரை மற்றும் **27.1.2014** முதல் **12.4.2014** வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் ஒருவித படபடப்பு, எதிர்காலம் குறித்த பயம், தாழ்வுமனப்பான்மை வந்துச் செல்லும். வேற்று மதத்தவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். காய்ச்சல், சளித் தொந்தரவு, நெஞ்சு எரிச்சல் வந்துப் போகும். அவசரத்திற்கு கைமாற்றாகவும், கடனாகவும் வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**29.8.2013** முதல் **12.11.2013** வரை உங்களின் தன&லாபாதிபதியான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் புதிய முயற்சிகள் வெற்றியடையும். நவீன ரக மின்னனு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக் கட்டும். புது பொறுப்புகளும், வாய்ப்புகளும் தேடி வரும். மகளுக்கு வேலைக் கிடைக்கும். திருமணமும் கூடி வரும்.



**13.11.2013** முதல் **26.1.2014** வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் **27.1.2014** முதல் **11.03.2014** வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் இக்காலக்கட்டத்தில் யாரை நம்புவது என்கிற மனக் குழப்பத்திற்கு ஆளாவீர்கள். என்றாலும் வளர்ச்சி தடைபடாது. முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். சில சமயங்களில் தர்மசங்கடமான சூழ்நிலையை சமாளிக்க வேண்டி வரும். ஒருபக்கம் பணவரவு உண்டு என்றாலும் சேமிக்க முடியாதபடி செலவுகளும் இருக்கும். உடல் அசதி, சோர்வு வந்து நீங்கும். வங்கிக் காசோலையில் முன்னரே கையெழுப்பமிட்டு வைக்க வேண்டாம். அரசு சம்பந்தப்பட்ட விஷயங்களில் அலட்சியமாக இருக்க வேண்டாம். வருமான வரி செலுத்துவதில் தாமதம் வேண்டாம்.

வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். வாடிக்கையாளர் களின் எண்ணிக்கை கூடும். தேங்கிக் கிடந்த சரக்குகளை தள்ளுபடி விலைக்கே விற்றுத் தீர்ப்பீர்கள். பழைய பாக்கிகளை இங்கிதமாகப் பேசி வசூலிப்பீர்கள். புது முதுலீடுகள் செய்து வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர்கள். வேலையாட்கள் உங்களிடம் விசுவாசமாக நடந்து கொள்வார்கள். சொந்த இடத்திற்கே கடையை மாற்றுவீர்கள். கெமிக்கல், ஏற்றுமதி இறக்குமதி, புரோக்கரேஜ் வகைகளால் ஆதாயம் அடைவீர்கள்.

உத்யோகத்தில் உங்களை அலைகழித்த மேலதிகாரி வேறிடத்திற்கு மாற்றப்படுவார். புது அதிகாரி உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வெகுநாட்களாக எதிர்பார்த்த சம்பள உயர்வு இப்பொழுது கைக்கு வரும். புதிய வாய்ப்புகளும் தேடி வரும். வழக்கில் வெற்றி உண்டு.

கன்னிப் பெண்களே! உங்களின் கனவு நனவாகும். அடி வயிற்றிலிருந்த வலி, தூக்கமின்மை விலகும். காதல் கனியும். விடுபட்ட பாடத்தை முடிப்பீர்கள். திருமணம் தள்ளிக் கொண்டே போனதே! இனி கல்யாணம் கூடி வரும்.

மாணவ மாணவிகளே! நல்ல கல்வி நிறுவனத்தில் மேற்படிப்பை தொடரும் வாய்ப்பு கிட்டும். ஆசிரியரின் அன்பை பெறுவீர்கள். கெட்ட நண்பர்களை ஒதுக்கித் தள்ளுங்கள். போட்டித் தேர்வுகளில் வெற்றி கிட்டும்.

கலைத்துறையினரே! உங்களின் படைப்பிற்கு பரிசு, பாராட்டு கிட்டும். வெகுநாட்களாக எதிர்பார்த்துக்கொண்டி ருந்த நிறுவனத்திலிருந்து புது வாய்ப்பு கதவை தட்டும்.

இந்த குரு மாற்றம் பரபரப்பான வாழ்க்கையையும், செல்வம், செல்வாக்கையும், திடீர் யோகங்களையும் தருவதாக அமையும்.

# மீனம்

பெற்ற தாய்க்கும், பிறந்த மண்ணுக்கும் முதல் மரியாதை தருபவர்களே! இதுவரை உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் அமர்ந்து உங்களின் தேவைகளை பூர்த்தி செய்து, அடிப்படை வசதிகளை உயர்த்திய குருபகவான் 28.05.2013 முதல் 12.06.2014 வரை 6ம் வீட்டில் மறைவதால் சின்ன சின்ன எதிர்ப்புகள் எழும்பத்தான் செய்யும். பணம் எவ்வளவு வந்தாலும் பற்றாக்குறையாகி வெளியில் கடன் வாங்க வேண்டி வரும். சகட குருவாக இருப்பதால் குடும்பத்தில் அவ்வப்போது சண்டை வரும். கணவன் மனைவிக்குள் ஒளிவு, மறைவில்லா மல் பழகுவது நல்லது. மனைவி உணர்ச்சிவசப்பட்டு பேசினால் அதைப் பெரிதுப்படுத்திக் கொண்டு பதிலுக்கு பதில், ஏட்டிக்கு போட்டியாக ஏதாவது சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். பிள்ளைகளின் எதிர்பார்ப்புகள் அதிகமாகிக் கொண்டேப் போகும். குடும்பத்தில் மாற்றி மாற்றி மருத்துவச் செலவுகள் வரும். வழக்கை நினைத்து கவலையடைவீர்கள். மற்றவர்கள் உங்களைப் பற்றி குறைவாகவும், தாழ்வாகவும் நினைப்பதாக எண்ணுவீர்கள் அந்த தாழ்வுமனப்பான்மை வேண்டாம். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். இதுநாள் வரை கட்டிக் காப்பாற்றிய கௌரவத்திற்கு பங்கம் வருமோ என்றெல்லாம் நினைப்பீர்கள். போலியானவர்களை கண்டு பிடிப்பதில் ஒரு தடுமாற்றம் இருக்கும். உறவினர்களுக்காக நாம் எவ்வளவு கொடுத்து உதவினாலும் நமக்கு நல்ல பெயர் இல்லையே என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள்.

**குருபகவானின் சஞ்சாரம் :**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் சுக லாபாதிபதியுமான செவ்வாயின் மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் செல்வதால் தடைகள் ஓரளவு நீங்கும். முக்கிய பதவி, பொறுப்பில் இருப்பவர்களின் நட்பு கிட்டும். சகோதரங்களின் மனசு மாறும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். பழைய கடன் பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வீடு, வாகன வசதிப் பெருகும். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். எப்போதும் மருந்தும், மாத்திரையுமாக இருந்த தாயார் சற்றே குணமடைவார். அவருடன் இருந்த கசப்புணர்வுகள் நீங்கும். பக்கத்து வீட்டுக்காரருடன் பகைமை வந்து நீங்கும்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் கடனாக கேட்ட இடத்தில் பணம் வரும். கடந்த கால சுகமான அனுபவங்களெல்லாம் மனதில் நிழலாடும். சொந்த&பந்தங்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். திருமணம் கூடி வரும். சிறுக சிறுக சேமித்து வைத்ததில் புறநகர் பகுதியிலாவது ஒரு கால் கிரவுண்டு வீட்டு மனை வாங்க முயற்சி செய்வீர்கள். உத்யோகத்தில் வேலைச்சுமை, விரும்பத்தகாத இடமாற்றம் வந்துச் செல்லும். சிறுசிறு விபத்துகள் வரும். வாகனப் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும்.

29.8.2013 முதல் 26.1.2014 மற்றும் 13.4.2014 முதல் 12.6.2014 வரை உங்களின் திருதியாதிபதியும் விரையாதிபதியும் குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் வீட்டில் தள்ளிப் போன சுப காரியங்களும் ஏற்பாடாகும். பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும். பிள்ளைகளால் அலைச்சலும், செலவினங்களும் அதிகரிக்கும். வீடு கட்டுவதற்கு வங்கிக் கடன் தாமதமாக கிடைக்கும். அவ்வப்போது உணர்ச்சிவசப்படுவீர்கள். யாரையும் யாருக்கும் சிபாரிசு செய்ய வேண்டாம். பணம், விலை உயர்ந்த நகையை கவனமாக கையாளுங்கள். அரசு செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம். இளைய சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும்.



13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.03.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். குழந்தை பாக்யம் கிடைக்கும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலைக் கிடைக்கும். பயணங்களால் ஆதாயமடைவீர்கள். இழுபறியாக இருந்த அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். வெளிவட்டாரத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்த உறவினர்கள் வலிய வந்துப் பேசுவார்கள்.

வியாபாரம் சுமார்தான், போட்டிகளால் விழிபிதுங்கு வீர்கள். மற்றவர்களை நம்பி பெரிய முதலீடுகள் செய்யாதீர்கள். தள்ளுபடி விற்பனை மூலமாகவும், விளம்பர யுத்திகளை கையாண்டும் லாபம் அதிகரிக்க செய்வீர்கள். அக்கம் பக்கம் கடைக்காரருடன் சண்டை, சச்சரவுகள் வந்து நீங்கும். வேலையாட்களிடம் கறாராக இருக்க வேண்டாம். தொழில் ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். அரசாங்கத்தை எதிர்த்துக் கொள்ளாதீர்கள். மர வகைகள், ஸ்டேஷனரி, பதிப்பகங்களால் லாபமடைவீர்கள். வியாபார விஷயமாக வழக்கு, நீதிமன்றம் செல்ல வேண்டாம். எதுவாக இருந்தாலும் பேசி தீர்ப்பது நல்லது.

உத்யோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். சக ஊழியர்களின் விடுப்பால் மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். ஆனால் மூத்த அதிகாரிகளின் பாராட்டுதலால் ஆறுதல் கிடைக்கும். எல்லா நேரமும் கறாராக பேசாமல் கொஞ்சம் கலகலப்பாகவும் பேசக் கற்றுக் கொள்ளுங்கள். அலுவலகம் சம்பந்தமாக வெளி மாநிலம், அயல்நாடு செல்ல வேண்டி வரும். எதிர்பார்த்த சலுகைகளையும், சம்பள பாக்கியையும் போராடி பெறுவீர்கள்.

கன்னிப் பெண்களே! காதல் கசந்து இனிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். நேர்முகத் தேர்வில் போராடி வெற்றி பெற்று புது வேலையில் அமர்வீர்கள். திருமணம் தாமதமாகும்.

மாணவ மாணவிகளே! உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தி படியுங்கள். விடைகளையும் எழுதி பாருங்கள். நண்பர்களுடன் மனஸ்தாபங்கள் வெடிக்கும். விட்டுக் கொடுத்து போங்கள். விளையாடும் போது காயம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

கலைத்துறையினரே! உங்களின் தனித்திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். உங்களின் புது முயற்சிகள் மூத்த கலைஞர்களின் ஆதரவால் வெற்றியடையும். கிசுகிசு தொல்லைகளால் டென்ஷனாவீர்கள்.

இந்த குரு மாற்றம் சிறுசிறு ஏமாற்றங்களையும், பணப்பற்றாக்குறையையும், சிக்கன நடவடிக்கையால் ஓரளவு முன்னேற்றத்தையும் தருவதாக அமையும்.




ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

5 Chapel Road, Ealing, London, W13 9AE, UK Tel: 0044 208 810 0835 Fax: 0044 208 840 0485
Email: info:ammanealing.com Web: www.ammanealing.com


**கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்கென பயன்படுத்தப்படுகின்றது.**

| | | | |
|---|---|---|---|
| 1 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - பதுளை | 8 | அம்மன் மகளீர் இல்லம் - அம்பாறை |
| 2 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - திருப்பழுகாமம் | 9 | சிவன் அருள் இல்லம் - மன்னார் |
| 3 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - செட்டிப்பாளையம் | 10 | சிறுவர் இல்லம் - ஊர்காவற்றுறை |
| 4 | திலகவதியார் இல்லம் - மட்டக்களப்பு | 11 | இந்து வித்தியாபிருத்திச் சங்கம் - யாழ்ப்பாணம் |
| 5 | யோகர் சுவாமி சிறுவர் இல்லம் - மட்டக்களப்பு | 12 | அன்பகம் - வவுனியா |
| 6 | விபுலானந்தர் இல்லம் - மட்டக்களப்பு | 13 | ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி இல்லம் - வவுனியா |
| 7 | விபுலானந்தர் இல்லம் - அக்கரைப்பற்று | 14 | ஸ்ரீ சத்தியசாயி இல்லம் - வவுனியா |
| | | 15 | யோகசுவாமி சைவ மகளீர் இல்லம்- மட்டக்களப்பு |

மேற்குறிப்பிட்ட இல்லங்களில் உங்கள் பேருதவியினால் 500 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். ஏராளமான வேண்டுதல்கள் இல்லங்களில் இருந்து வந்த வண்ணம் உள்ளன. அம்பிகை அடியார்களாகிய நீங்கள் முன்வந்து இன்னும் இப்பணிக்கு உதவவேண்டுமென வினயமாக வேண்டி நிற்கின்றோம். கடந்த நிதியாண்டில் காக்கும் கரங்கள் திட்டத்திற்கு **£81,990.00** பவுண்களும் மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்கு **£ 114,285.00** பவுண்களும் அனுப்பப்பட்டுள்ளன.

ஆலயம் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை எமது ஆலயத்தினால் தாயகப்பணிக்கு **£1,624,315.55** பவுண்களும், 2012- சித்திரை முதல் **29,500.00** பவுண்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.


























5/2013



# ஸ்ரீகற்பக விநாயகர் கோவில்

**2-4, Bedford Road, London E 17, T : 0208 527 3819**

அற்புத அருள்புரி கற்பகக் கணபதி பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்

## வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தில்
## 21.04.2013 ஞாயிற்றுக்கிழமை முதல்

# லட்ச தீப ஒளி வழிபாடு

சைவ மரபில் தீப ஆராதனை அக்கினி வழிபாடு விளக்கேற்றல் போன்றவை ஒளி வழிபாட்டின் அம்சமாகும். முழுமுதற் பரம்பொருளின் முதல் வடிவம் ஜோதி வடிவமாகிய ஒளி வடிவமாகும். மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே என்பார் மணி-வாசகர். ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெரும் சோதி ஒளிவளர் விளக்கே, கற்பனை கடந்த சோதி அலகில் சோதியன் தூண்டு சுடரனைய சோதி கண்டாய் என பல்வேறு முறையில் இறைவனின் பொது வடிவமாகிய சொரூபநிலை போற்றப்படுகிறது. அனைத்துத தெய்வத்திற்கும் பொதுவான இவ்வொளி வழிபாடு லட்ச தீபமாக கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற உள்ளது.

தீப ஒளி ஏற்றுவதால் எமது வாழ்வின் நல் உயர்வு தீய கன்ம வினைகள் ஒழிந்து நற்பலன் பெறவும், வேண்டும் நற் பிரார்த்தனைகள் நிறைவேறவும், தீபங்களை ஏற்றி தொடர்ந்து ஒரு லட்சம் தீபம் ஏற்றும் வழிபாட்டில் அனைவரும் பங்கு கொள்ளுமாறு கற்பக விநாயகப் பெருமான் அருளால் வேண்டுகிறோம்.

குறிப்பு : பங்கு கொள்ளும் தினத்தில் ஆசார சீலராக வரவும். ஒரு முகமாக நீங்கள் நினைக்கும் நற் காரியம் நிறைவேறவும், வாழ்வில் நல்லொளி மிளிரவும் கல்வி, திருமணப்பேறு, நோய், நிவாரணம் ஆயுள் விருத்தி என்னும் நற்பேறுகளுடன் கற்பக விநாயகப் பெருமான் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

**விளக்கை ஏற்றிவெளியை அறிமின் விளக்கின் முன்னே வேதனை மாறும் (திருமந்திரம்)**

ஆலய நிர்வாகமும் சிவாச்சார்யார்களும்.